# ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்



அக்டோப
1978
ஐப்பசி



விலை
85
காசு

# ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

பரபரப்பும் ஆரவாரங்களும் நிறைந்த தற்காலச் சூழ்நிலையில், மக்களுக்கு மனச் சாந்தியைத் தரும் அருமருந்தாக இந்தப் பத்திரிகை விளங்குகிறது.

தற்கால மக்களின் ஆன்மிக மறுமலர்ச்சிக்கு ஏற்ற வகையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குரலாக ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் ஒலிக்கிறது.

உங்கள் உள்ளம் உயர, நீங்கள் மேன்மையுற, அவசியம் படிக்க வேண்டிய பத்திரிகை இது.

## சந்தா விவரம்

| | |
|---|---|
| வருட சந்தா (சிறப்பு மலர் உட்பட) | ரூ. 8 |
| ஆயுள் சந்தா | ரூ. 100 |
| தனிப் பிரதி | 85 காசு |

ஆயுள் சந்தாவை மொத்தமாகவோ, பகுதி பகுதியாகவோ, மாதம் ரூ.10-ஆகவோ செலுத்தலாம்.

ஆயுள் சந்தாதாரர்களாகத் தங்களைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் வருட சந்தாதாரர்கள், தாங்கள் செலுத்தியுள்ள வருட சந்தாவைக் கழித்து மீதம் உள்ள தொகையைச் செலுத்தி, ஆயுள் சந்தாதாரராகத் தங்களைப் பதிவு செய்துகொள்ளலாம்.

## ஒரு வேண்டுகோள்

1. பேரன்பிற்குரிய வாசக அன்பர்கள் தங்களின் சந்தாவைச் செலுத்துவதுடன், மேலும் தமது நண்பர்கள் சிலரையும் சந்தாதாரர்களாகச் சேர்த்துத் தருவது ஒரு நல்ல தொண்டாகும். இதன் மூலம் நமக்கும் மற்றவர்களுக்கும் நாம் நன்மையைச் செய்துகொள்கிறோம்.

2. சந்தாதாரர்களை அதிகப்படுத்துவதில் எங்களால் இயன்ற முயற்சி செய்து வருகிறோம். அன்பர்கள் தங்களின் பங்காக இந்தத் தெய்விகக் கைங்கரியத்தில் கல்வி ஸ்தாபனங்கள், சத்சங்கங்கள் முதலியவைகளுக்குப் பத்திரிகை போய்க்கொண்டிருக்கும்படி செய்யலாம். **இது ஒவ்வொரு மாதமும் தாங்கள் அளிக்கும் மேலான நன்கொடையாகவும், தங்களை ஞாபகப்படுத்தும் சிறந்த வெகுமதியாகவும் அமையும்.**

3. பெரியோர்கள் இந்த வேண்டுகோளைத் தங்களுக்கு ஏதோ சம்பந்தமில்லாதது என்று புறக்கணித்துவிடாமல், மேலும் சந்தாதாரர்களைச் சேர்த்துத் தரும் விஷயத்தில் தங்களால் இயன்ற ஒரு சிறிதளவிற்காகிலும் முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறோம். **குறைந்தது மூன்று சந்தாதாரர்களையாவது சேர்த்துத் தருவது மிகப் பெரிய ஒரு உபகாரமாக இருக்கும்.** இதன் மூலம் இன்றைய சமுதாயத்தின் சூழ்நிலையில் நல்ல கருத்துகள் வளர அரும்பெரும் தொண்டு செய்தவர்களாகிறீர்கள்.

4. புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பி வைக்கும்போது, புதிய சந்தா என்று குறிப்பிட்டு எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பழைய சந்தாதாரர்கள், தமது கடிதப் போக்குவரத்துகள் எல்லாவற்றிலும் சந்தா எண்ணையும் முழு விலாசத்தையும் அவசியம் குறிப்பிட்டு எழுத வேண்டுகிறோம்.


விவரங்களுக்கு:

தொலைபேசி : 71231

**ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்**

**ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்**

**மயிலாப்பூர் :: சென்னை-600 004**

## எழுத்தாளர்களுக்கு

நமது பத்திரிகைக்கு ஏற்புடைய கதை, கட்டுரை, தகவல்கள், பொன்மொழிகள், மகான்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் முதலிய எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

**மக்களுக்குப் பயன்படுவதாகவும், சுருக்கமாகவும் கருத்தாழம் கொண்டதாகவும் எழுத்தோவியம் அமைவது முற்றிலும் அவசியம்.** காகிதத்தின் ஒரு பக்கத்தில் மட்டும், வரிக்கு வரி நிறைய இடம் விட்டு, எளிய தமிழ்நடையில் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

பத்திரிகையில் வெளியிடப்படுவதாக இருந்தால், அனுப்பியவருக்கு ஒரு வார காலத்திற்குள்ளாக ஆசிரியர் சார்பாகப் பதில் கிடைத்துவிடும். அவ்விதம் பதில் பெருத அன்பர்கள், போதிய தபால் தலைகளை அனுப்பிவைத்துத் தமது படைப்புக்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

ஆசிரியர்

**ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்**

---

## ஓர் அழைப்பு

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திரிகைக்குத் தற்சமயம் 245 ஊர்களில் பத்திரிகை விற்பனையாளர்கள் ஏஜண்டுகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். இப் பத்திரிகையின் மேல் ஈடுபாடு கொண்டுள்ள அன்பர்கள் அல்லது பத்திரிகை விற்பனையாளர்கள் ஏஜண்டுகள் நியமிக்கப்படாத ஊர்களுக்கு ஏஜன்சி எடுத்துப் பிரதிகளை விநியோகிக்க விரும்பினால், அதற்குரிய விதிமுறைகளை எங்களுக்கு எழுதிப் பெறலாம்.

**ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்**

---

## சந்தாதாரர்களுக்கு

தங்களுக்குப் பிரதிகள் அனுப்பப்படுவது சம்பந்தமாக ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியாலயத்திற்குக், கடிதம் எழுதிப் பதில் பெற விரும்பும் சந்தாதாரர்கள், தங்கள் கடிதத்துடன் போதிய தபால்தலைகளை இணைத்து அனுப்புவது நலம்.

தங்களுக்குப் பத்திரிகை அனுப்பப்படும் விலாசத்தைக் கவனமாகச் சரிபார்த்துக் குறையிருந்தாலோ முகவரி மாற்றம் செய்துகொண்டாலோ உடனுக்குடன் தகவல் தெரிவியுங்கள்.

ஆங்கில மாதம் 15-ம் தேதி வரையிலும் தங்களுக்குப் பத்திரிகை வந்து சேராவிட்டால், கடிதம் எழுதிக் காரியாலயத்திற்குத் தகவல் தெரிவிக்கக் கோருகிறோம்.

---

## டெபாசிட் முறை

ஆண்டுதோறும் ரூ. 8 சந்தா செலுத்திப் புதுப்பிப்பதற்குப் பதிலாக ரூபாய் நூறு டெபாசிட் செய்துவிட்டால், தொடர்ந்து மாதந்தோறும் ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திரிகை வந்துகொண்டிருக்கும். பத்திரிகை வேண்டாம் என்று (குறைந்தது ஐந்து வருடங்களுக்குப் பிறகு) கருதும்போது தாங்கள் டெபாசிட் செய்த முழுத் தொகையாகிய ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். டெபாசிட் முறை வெளிநாட்டுக்கு இல்லை.

நிர்வாகி

**ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்**

# ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

| தொகுதி—58 | அக்டோபர் 1978 | இதழ்—10 |
|---|---|---|

## பொருளடக்கம்

பக்கம்



****************************************

## சந்தாதாரர்கள் கவனிக்க

சந்தா எண் 11,000 முதல் 11,300 வரையிலும் உள்ள அன்பர்களின் சந்தாத் தொகை அக்டோபர் மாதத்துடன் முடிவடைகிறது.

சந்தா எண் 12,000 முதல் 12,800 வரையிலும் உள்ள அன்பர்களின் சந்தாத் தொகை நவம்பர் மாதத்துடன் முடிவடைகிறது.

சந்தா எண் 1 முதல் 1999 வரையிலும், சந்தா எண் 1A முதல் 1999A வரையிலும் உள்ள அன்பர்களின் சந்தாத் தொகை டிசம்பர் மாதத்துடன் முடிவடைகிறது.

மேலே குறிப்பிட்டுள்ள எண்களுக்கிடையில் உள்ள சிலர், ஏற்கனவே சந்தாவை அனுப்பிப் புதுப்பித்துக்கொண்டிருக்கிறுர்கள். அவ்விதம் புதுப்பித்துக்கொள்ளாத அன்பர்கள் கூடிய விரைவில் சந்தாவைச் செலுத்திப் புதுப்பித்துக்கொள்ள வேண்டுகிறேம்.

பெரும்பாலும் நமது பத்திரிகையின் எல்லாச் சந்தாதாரர்களுமே, சந்தாவைப் புதுப்பித்துக் கொள்பவர்களே ஆவர். சந்தாவைக் கூடிய விரைவில் முன்னதாகவே செலுத்துவதால் பல சங்கடங்களையும் குழப்பங்களையும் தவிர்க்க முடிகிறது. மேற்கொண்டு சந்தாவைத் தொடர இயலாதவர்கள், அல்லது உரிய காலத்திற்குள் சந்தாவைச் செலுத்த இயலாதவர்கள்—முன்னதாக ஒரு கார்டு எழுதித் தகவல் தெரிவிப்பது எங்களுக்குப் பெரிதும் உதவிகரமாக இருக்கும்.

ஆண்டுக்கு ஒரு முறை ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் சிறப்பு மலராக வெளிவருவது வாசகர்கள் அறிந்ததே. இந்த ஆண்டு நவம்பர் மாதம் விஜயம் சிறப்பு மலராக வெளிவர இருக்கிறது.

நிர்வாகி
**ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்**

# ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வெள்ள நிவாரணப் பணி
## ஒரு வேண்டுகோள்

1978 ஆகஸ்ட் முதல் வாரத்தில் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் பீகாரில் வெள்ள நிவாரணப் பணிகளைத் துவக்கியது. பீகார் மாநிலத்தைச் சேர்ந்த தர்பங்கா மாவட்டத்தில் ஹாயாகட் பகுதிகளில் சட்டு பஞ்சாயத்தைச் சேர்ந்த ஆறு கிராமங்களில் ஆரம்பிக்கப்பட்ட இந்த வெள்ள நிவாரணப் பணிகள், இப்போது பகல்பூர் பகுதியைச் சேர்ந்த நவகாசியாப் பிரதேசத்திற்கும் காட்டிஹார் நகர்ப்புறத்திற்கும் விரிவுபடுத்தப்பட்டிருக்கின்றன.

மேற்கு வங்காளத்தில் மால்தாவிலுள்ள ராடுவா என்னும் இடத்திலும், மூர்ஷிதாபாத் பிரதேசத்தைச் சேர்ந்த லால்பாக் பகுதியிலும் ராமகிருஷ்ண மிஷனின் வெள்ள நிவாரண வேலைகள் தொடர்ந்து வருகின்றன.

ஹாயாகாட் பகுதியிலும் நவகாசியாப் பிரதேசத்திலும்மிஷன், கோதுமையையும் துணிகளையும் விநியோகம் செய்து வருகிறது. காட்டிஹார் பகுதிகளில் இடிந்த குடிசைகளைக் கட்டவும் செப்பனிடவும் தேவையான கட்டிடச் சாமான்கள் தரப்படுகின்றன. லால்பாக், ராடுவாப் பகுதிகளில் சமைத்த உணவு வழங்கப்படுகிறது.

இவ்விதம் பாதிக்கப்பட்டுள்ள வேறு பல பகுதிகளிலும் நிவாரணப் பணிகளைத் துவக்க வேண்டி நேரலாம்.

இந்த நிவாரணப் பணிகள் சிறப்பாக நடந்தேறப் பணமாகவோ பொருளாகவோ தந்து உதவும்படி பொதுமக்களை ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் கேட்டுக்கொள்கிறது. கடந்த காலங்களில் உதவியைப் போலவே இப்போதும் இந்த அன்புச் சேவையைப் புரிவதில் பொது மக்கள் எங்களுக்குத் தாராளமாக உதவ முன்வருவார்கள் என்று நம்புகிறோம்.

இந்த நிவாரணப் பணிகளுக்கான நன்கொடைகள் அனைத்தும் நன்றியுடன் ஏற்கப்படும். நன்கொடை பெற்றதற்கான விவரமும் தெரிவிக்கப்படும். ஸ்ரீராமகிருஷ்ண மிஷனுக்கு அளிக்கப் படும் எல்லா நன்கொடைகளுக்கும் வருமான வரி விலக்குச் சலுகை உண்டு.

கீழ்க்கண்ட முகவரிகளுக்கு உதவியை அனுப்பலாம். செக்அல்லதுடிராப்ட் அனுப்புவோர் 'ஸ்ரீராமகிருஷ்ண மிஷன்' என்ற பெயருக்கு அனுப்பக் கோருகிறோம்.

1. Ramakrishna Mission, Belur Math, Dist. Howrah-711 202
2. Advaita Ashrama, 5, Dehi Entally Road, Calcutta-700 014
3. Udbodhan Office, 1, Udbodhan Lane, Calcutta-700 003
4. Ramakrishna Mission Institute of Culture, Gol Park, Calcutta-700 029
5. Ramakrishna Mission Ashram, Ramakrishna Avenue, Patna-800 004
6. Ramakrishna Mission Vivekananda Society, 'L' Road, Bistupur, Jamshedpur-831 001
7. Ramakrishna Mission, Ramakrishna Ashrama Marg, New Delhi-110 055
8. Ramakrishna Mission, Ramakrishna Mission Marg, Khar, Bombay-400 052
9. Ramakrishna Mission, Sullivan Garden Street, Mylapore, Madras-600 004

பேலூர் மடம்
29-8-78

**சுவாமி கம்பீரானந்தர்**
பொதுச் செயலாளர்

# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை

—திருமூலர்


தொகுதி 58 | காளயுக்தி ஹூ ஐப்பசி மீ | இதழ் 10





या श्रीः स्वयं सुकृतिनां भवनेष्वलक्ष्मीः
पापात्मनां कृतधियां हृदयेषु बुद्धिः ।
श्रद्धा सतां कुलजन-प्रभवस्य लज्जा
तां त्वां नताः स्म परिपालय देवी विश्वम् ॥

யா ஸ்ரீ: ஸ்வயம் ஸுக்ருதிநாம் பவநேஷ்வலக்ஷ்மீ:
பாபாத்மநாம் க்ருததியாம் ஹ்ருதயேஷு புத்தி: |
ச்ரத்தா ஸதாம் குலஜந-ப்ரபவஸ்ய லஜ்ஜா
தாம் த்வாம் நதா: ஸ்ம பரிபாலய தேவி விச்வம் ||

—ஸ்ரீதேவி மகாத்மியம்

புண்ணியவான்களுடைய வீடுகளில் ஸ்ரீதேவியாகவும், பாவிகளுடைய வீடுகளில் மூதேவியாகவும், திருந்திய மதியுடையவர்களின் உள்ளத்தில் புத்தியாகவும், நல்லோர்களிடம் சிரத்தையாகவும், நற்குலத்தில் உதித்தோரிடம் வெட்கமாகவும் எவள் தானே விளங்குகிறுளோ அவளே ஆகிய உன்னை வணங்குகிறோம். தேவியே, உலகனைத்தையும் காத்தருள வேண்டும்.

நன்றே வருகினும் தீதே விளைகினும் நானறிவது
ஒன்றேயும் இல்லை உனக்கே பரமெனக்கு உள்ளஎல்லாம்
அன்றே உனதென்று அளித்துவிட் டேன்அழி யாதகுணக்
குன்றே அருட்கட லேஇம வான்பெற்ற கோமளமே.

— அபிராமி அந்தாதி



# தீபாவளி கொண்டாடுவோம்

ர. வே. ரத்தினம்

ஸ்ரீமத் பாகவத புராணம்; தசம ஸ்கந்தம்; பின் பாதி; அத்தியாயம் 59—நரகாசுர வதத்தைக் குறிப்பிடும் இடம் இதுதான். கன்னிகைகள் பலரையும் பிடித்துச் சிறைப்படுத்திக் கொடுமை செய்து வந்த பௌமாசுரனுக்குத்தான் நரகன் என்று ஒரு பெயர். இந்திரனுடைய ஆட்சிக்கும் நரகனால் தொல்லைகள் விளையலாயின. உடனே அவன் துவாரகை சென்று கண்ணபிரானிடம் முறையிட்டான். பரந்தாமன் சத்தியபாமாவையும் அழைத்துக்கொண்டு, பிராக்ஜோதிஷபுரத்தை அடைந்து, அரக்கனோடு போர் தொடுத்தார். கடுமையான போர் நடந்தது. இறுதியில் ஐயன்மீது தன் திரிசூலத்தைக் கொண்டு தாக்க அரக்கன் முற்பட்டபோது, கண்ணபிரான் சுதர்சன சக்கரத்தினால் அவன் தலையைக் கொய்து விழ்த்தினார் என்று பாகவத புராணம் பேசும்.

நரகாசுரன் வீழ்ந்தவுடன் அவனுடைய அன்னை பூமாதேவி கண்ணபிரானெதிரே வந்து, தன் மகன் அபகரித்து வைத்திருந்த பொருள்கள் அனைத்தையும் ஒப்படைத்தாள். பின் அவள் கண்ணபெருமானைத் துதி செய்யலானாள். பரம்பொருளே பரந்தாமன் வடிவெடுத்து வந்துள்ள பேருண்மையை அழகுறக் கூறித் துதித்து, நிலமாமடந்தை ஐயனை, நரகன்மைந்தன் பகதத்தனைக் காத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தாள். அவ்வண்ணமே கருணைக் கடலான கிருஷ்ணபகவான் செய்தருளினார்.

நரகாசுரனே பகவானிடம் கடைசியில் ஞானோதயம் பெற்றுத் தன் வாழ்வு முற்றுப்பெற்ற நாளை உலக மக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தோடு கொண்டாடி மங்கல வாழ்வு வாழ வேண்டும் என்று வேண்டியதாகவும் கூறுவர். இறைவன் அவனது பிரார்த்தனையை ஏற்றார். அதன்படி, நாம் இன்றும் நாளையும் இந்த நரகாசுரவதத்தை 'நரக சதுர்த்தசி'யன்று பெரிதாகக் கொண்டாடி வருகிறோம். தீபாவளி ஒரு புண்ணிய காலமாகக் கருதப்படுகிறது. அன்று விடியும் முன் எண்ணெய் தேய்த்து வெந்நீரில் ஸ்நானம் செய்கிறோம். ஒருவரையொருவர் 'கங்கா ஸ்நானம் ஆயிற்றா?' என்று விசாரிக்கும் வழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம். இந்த நரக சதுர்த்தசிக்கு முதல்நாள் மகாபலி தீபம்; மறுநாள் குபேர பூஜை. வடநாட்டில் மூன்று நாளையுமே கொண்டாடுகிறார்கள்.

பூமிப்பிராட்டியும் தன் புத்திரசோகத்தைத் துறந்து, கண்ணபிரானிடம், ''என் மகன் மறைந்த இந்த நாளை ஊரும் உலகமும் மகிழ்ச்சியோடு கொண்டாடத் தாங்கள் அருள வேண்டும்'' எனக் கோரினாளாம். ஆஹா, அங்கும் ஒரு மகத்தான, தியாக உணர்வு. தன்னை அழித்துக்கொண்டு, உலகம் வாழ வழிசெய்யும் பேருள்ளத்தைப் புவித் தாயினிடம் காண்கிறோம். அந்நாள் தொடங்கியது தான் இந்தத் தீபாவளிப் பண்டிகை.

நரகாசுரனை வதம் செய்ததை ஒரு சாமானிய நிகழ்ச்சியாக எண்ண முடியாது. சிவபெருமான் முப்புரத்தை அழித்ததற்கு இணை, திருமால் நரகனை மாய்த்தது எனலாம்.

நாராயணோ'ஹம் நரகாந்தகோ'ஹம்
புராந்தகோ'ஹம் புருஷோ'ஹம் ஈச: !

என்பார் ஆதிசங்கரர் விவேகசூடாமணியில். சுலோகம் 495. ''நானே நாராயணன்; நரகாசுரனை மாய்த்தவன் நான். (திரி) புராசுரனை ஒழித்தவனும் நானே. பரம புருஷன் நான்தான். பரமேசுவரனும் நான்தான்'' என்று இந்த அடிகள் பொருள்படும். இதிலிருந்து நரகாசுரவதத்தின் முக்கியத்துவத்தை உணரலாம்.

மற்றச் சில பண்டிகைகள் போல் அல்லாமல் தீபாவளி பாரதம் நெடுகக் கொண்டாடப்பெறுகிறது. 'ஓணம் என்றால் என்ன?' என்பான் கேர

ளத்திற்கு வெளியில் உள்ளவன். ஹோலி என்றால் ஏதுமே தெரியாது தென்புலத்திலே. இப்படியாக ஊருக்கு ஊர், பழக்கங்கள் பண்டிகைகள் மாறு படும் இந்தப் பரந்த பாரதத்தில் தீபாவளி கொண் டாட இமயம் முதல் குமரி வரையில் ஆள் உண்டு. இன்னும் கூர்ந்து நோக்கின், இந்த நாட்டில் தோன் றிய இதர மதங்களும் தீபாவளியை ஏற்கின்றன என்பார் காஞ்சிப் பெரியவர்கள். இந்தியாவிற்கு வெளியே பிறந்த மதங்களைத் தவிர மற்ற நம் சம்பிரதாயங்கள் அனைத்தும் தீபாவளியை ஒப்புக் கொள்கின்றன. புத்த, ஜைன மதத்தினருக்கும் அது ஒரு பண்டிகை ஆகும்.

ஒரு குடும்பத்தினுள்ளேயே, சில திருவிழாக்கள் ஆடவர்க்கு அதிகம் உரியனவாக இருக்கும் சில பண்டிகைகள் சிறப்பாகப் பெண்டிர்க்கு உரியவை. பல திருநாள்களில் வீட்டில் 'பெரியவர்கள் ஏதோ செய்துகொண்டிருக்கிறார்கள்' எனக் கூறியவண் ணம் வீட்டுக் குழந்தைகள் ஒட்டாமல் ஒதுங்கி நிற் கும். இந்தத் தீபாவளிப் பண்டிகை குறிப்பாக, நம் தென்னகத்தில் பட்டாசு-மத்தாப்புக் கவர்ச்சியி னாலோ என்னவோ), குழந்தைகள் உள்ளத்தில் குதூகலம் ஊட்டும் கோலாகலத் திருநாளாக விளங்குகிறது.

வெகுவான பூஜைகள் புரஸ்காரங்கள் இதில் அவ்வளவாக இல்லை. சுவாமி படத்தின் முன் வைத்துப் படைத்துப் பிரார்த்தித்துவிட்டுப் புத்தாடை அணிய வேண்டியது; பலகாரங்கள் புசிக்க வேண்டியது. மந்திர தந்திரம் ஏதும் இல்லை. வடக்கே, பெயருக்கு ஏற்ப விளக்கு வரிசைகள் ஏற்றிவைத்து இருளை அகற்றுவர். நாம் பெரும் பாலும் வாண வெடியோசையினால் பூச்சி பொட்டு தலைதூக்காமல் அந்தப் பருவத்தில் பார்த்துக் கொள்கிறோம் எனலாம். பெரும் அளவில் திருக் கோயில்களின் திருவிழாக்கள், உற்சவங்கள் ஆகிய வற்றினால் மட்டுமே பிழைக்கும் பட்டாசு-மத்தாப் புக் கைத்தொழில்கள் தீபாவளிப் பண்டிகையினால் மேலும் வளர்ந்தோங்க வழி அமைகிறது. துணி நெய்பவர், எண்ணெய் ஆட்டுபவர்—இப்படியாகச் சமூகத்தின் பலவேறு அங்கத்தினர்களுக்கும் தீபா வளிப் பண்டிகை ஓர் இனிய வரப்பிரசாதம்.

தீய சக்திகளை களைந்தெறிந்து கண்ணபிரான் புவி யைக் காத்தருளிய நன்னாள் தீபாவளி. வீட்டுக்கு வீடு கங்கை பாய்ந்தோடிப் புனிதமாக்கும் பொன் னாள். விளக்கு வைத்து, இருளை அகற்றும் தீபத் திருநாள். தீபாவளி என்பது தீயவனை இறைவன் ஒழித்த சத்தியத் திருநாளாக, குழந்தைகள் முதல் முதியோர் வரை அனைவரையும் உற்சாகமூட்டும் உயரிய பண்டிகையாக, மங்கலம் நிறைந்த மகோன்னத விழாவாக என்றும் விளங்கும். ஏனெனில் இந்திய மண்ணில் பிறந்தோர் இதயத்தில் தனியிடம் பற்றி நிற்கும் இன்பநாள் இது.

---



துளசி : இந்தியக் குடும்பங்களில் பக்தியோடு பாராட்டப்படும் துளசிக்கு உரிய மருத்துவக் குணங்கள் பற்றிப் பல நாடுகளில் ஆராய்ச்சிகள் நடை பெறுகின்றன. துளசிஇலைச் சாறு சிலந்தி, குடல்புழு, நாடாப்புழு முதலிய வற்றை அகற்றும் வலிமைபெற்றது. தோல் மீது வரும் படையையும் அகற்றி விடுகிறது. அன்றாடம் சில துளசியிலைகளைத் தின்று வந்தால் காய்ச்சல், சளி முதலியவை வராமல் பாதுகாக்கும்.

நன்றி : எகனாமிக் டைம்ஸ்

இந்த உலகில் ஆறுகளையும் குளங்களையும் போன்ற மக்கள் அதிகம். ஆறுகளும் குளங்களும் அதிக நீரைப் பெற்றதும் நிரம்பி வழிந்துவிடும். அதுபோல் மக்களும் தாங்கள் மட்டுமே பெருமையும் முன்னேற்றமும் கொண்டு உயர்வடைய விரும்புவர். ஆனால் சமுத்திரத்தைப் போன்ற மக்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். சமுத்திரம் பூர்ண சந்திரனைக் கண்டு பொங்கும். அது போல் கடலைப் போன்ற குணமுடைய மக்கள்தாம் பிறருடைய ஏற்றம் கண்டு மனமகிழ்ச்சி அடைவார்கள்.

—துளசிதாசர்



# விஜயதீபம்

## தேவியின் கருணை

துர்க்காதேவி! மங்கள வடிவானவளே! கருணை மயமானவளே! உலகம் முழுவதும் பரந்தவளே! உலக வடிவமானவளே! உனக்கு நமஸ்காரம். உலகம் வணங்கும் திருவடிகளை உடையவளே! உலகத்தை விடுவிப்பவளே! உனக்கு நமஸ்காரம். அனைவருக்கும் சரணமானவளே! உன்னை நான் புகலாக அடைகிறேன்.

நீயே வைணவி; சக்தியும் வீரியமும் நீயே; உலகத்திற்கு வித்தும் பரமான மாயையும் நீயே. பிரபஞ்சம் முழுவதையும் நீ உன் மோகவலைக்கு உட்படுத்தியுள்ளாய். உனக்கு விருப்பம் உண்டாகும்போது உயர்ந்த முக்தியைக் கொடுக்கிறாய்.

தேவி! சரணமடைபவர்களின் துயரத்தைப் போக்குகிறவளே! உலகிற்குத் தாயே! உன் கிருபை அனைவருக்கும் உண்டாவதாக. உலகிற்குத் தலைவியே! அனைவரையும் காப்பவளே! அசையும் பொருள்களுக்கும் அசையாப் பொருள்களுக்கும் ஈச்வரி! அனைவரின் மீதும் கிருபை கூர்ந்தருள்வாயாக.

—தந்திர நூல்கள்

அவித்தையில் ஆழ்ந்திருப்பவரின் உள் அந்தகாரத்தைப் போக்கும் ஞானசூரியன் உதயமாகும் துவீத நகரம் நீ. மூடர்களுக்கு (அவர்களின் அஞ்ஞானத்தைப் போக்கும்), சைதன்ய மலர்களின் தேன் பாயும் நதி நீ. தரித்திரர்களுக்குச் சிந்தாமணி நீ. பிறவிக் கடலில் ஆழ்ந்திருப்பவர்களுக்கு, ஆதிவராகமூர்த்தியின் தந்தம் நீ!

—சௌந்தரிய லஹரீ

நம்பினோர் கெடுவதில்லை; நான்குமறைத் தீர்ப்பு: அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாம்.

—கவியரசர் பாரதி

அகில உலகையும் காக்கும் கருணையுள்ளம் கொண்டவள் பார்வதிதேவி. ஆதிபராசக்தியாகிய அவள் மிகவும் வலிமை பொருந்திய இமவானுக்கு அருமை மகளாகத் தோன்றினாள். அப்போது அவள் சிவபெருமானைக் கணவனாக அடைய விரும்பிக் கடுந்தவம் மேற்கொண்டாள். தவத்தின் சிறப்பு சிவபெருமானை மகிழ்வித்தது. அவர் பார்வதியின் எதிரே தோன்றி அவளைத் தமது மனைவியாக ஏற்றுக்கொண்டார். சிறிது நேரத்தில் அவர் எங்கோ சென்று மறைந்துவிட்டார்.

பார்வதிதேவி தன் ஆசிரமத்திற்கு வெளியே வந்து, அங்கிருந்த ஒரு கற்பாறையில் சென்று அமர்ந்தாள்.

அப்போது எங்கிருந்தோ ஒரு சிறுவனின் அழுகுரல் கேட்டது. "நானோ சிறுவன். ஐயோ! என்னை ஒரு முதலை பிடித்துக்கொண்டுவிட்டதே! நான் என்ன செய்வேன்! என் பெற்றோருக்கு நான் ஒரே மகன். என்னைக் காப்பாற்றுங்கள். முதலை என்னை இப்போதே விழுங்கிவிடும் போலிருக்கிறதே! யாராவது வந்து என்னைக் காப்பாற்றுங்களேன்!'' என்று பலமாகக் கூச்சலிட்டு அந்தச் சிறுவன் அழுதுகொண்டிருந்தான்.

சிறுவனின் கதறலைக் கேட்டவுடனே பார்வதிதேவி விரைந்து ஓடோடி வந்தாள். அவள் கண்ட காட்சிதான் என்ன! ஏரியில் ஒரு முதலை அழகிய சிறுவன் ஒருவனின் காலைப் பிடித்து இழுத்துச் சென்றுகொண்டிருந்தது. தேவியைக் கண்ட முதலை மேலும் விரைவாகச் சிறுவனுடன் ஏரியின் நடுவே செல்ல ஆரம்பித்தது.

சிறுவனின் எழில்முகம் ஒரு புறம்; முதலை பிடித்துக்கொண்டதனால் கதறும் சிறுவனின் பரிதாபத்

தோற்றம் மறுபுறம். இந்தக் காட்சியைக் கண்ட தேவி வெகுவாகத் துடிதுடித்தாள். அவள் முதலையைக் கூவியழைத்து, "முதலையரசே! பாவம், ஒன்றும் அறியாத இந்தக் குழந்தையைத் தயவு செய்து விட்டுவிடுங்கள்" என்று கேட்டுக்கொண்டாள்.

அதற்கு முதலை, "தேவி, ஒரு நாளில் இந்த நேரத்தில் எது என் அருகில் வருகிறதோ அதையே உணவாகக் கொள்வது என் வழக்கம். அதன்படி இந்தச் சிறுவன்தான் இன்று எனக்கு இரையாக இங்கே வந்திருக்கிறான். பிரம்மதேவனே இவனை இன்று எனக்காக அனுப்பியிருக்கிறான். ஆகவே இவனை நான் விட்டுவிடுவதற்கில்லை. தயவுசெய்து என்னை மன்னியுங்கள்" என்று பதில் சொன்னது.

முதலையின் பதில் தேவியின் கருணையுள்ளத்தை மேலும் கலக்கிவிட்டது. "முதலையே! நான் தங்களை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன். இமயத்தின் சிகரத்தில் அமர்ந்து நான் கடுந்தவம் செய்திருக்கிறேன். அந்தத் தவ வலிமைக்காக, இந்தச் சிறுவனை விட்டுவிடும்படி தங்களை நான் மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்" என்று பார்வதிதேவி முதலையை நோக்கிக் கூறினாள்.

அதைக் கேட்ட முதலை, "தேவி! நீங்கள் இதுவரையிலும் செய்த கடுமையான தவங்களின் பலன் முழுவதையும் அப்படியே எனக்குக் கொடுப்பீரானால் நான் இந்தச் சிறுவனை இக்கணமே விட்டுவிடுகிறேன்" என்று தெரிவித்தது.

முதலையின் வேண்டுகோளைக் கேட்ட தேவி மிகுந்த உற்சாகத்துடன், "முதலையரசே! இந்தத் தவப் பயன் மட்டும் என்ன, நான் இத்தனை பிறவிகளில் இதுவரையிலும் சேமித்து வைத்துள்ள புண்ணியச் செயல்களின் பலன் முழுவதையுமே அப்படியே தங்களுக்கே தந்துவிடுகிறேன்; நீங்கள் தயவுசெய்து அந்தச் சிறுவனை விட்டுவிடுங்கள்" என்று பிரார்த்தித்தாள்.

தேவி இவ்விதம் சொன்ன மறுகணமே தவப் பயன் முதலையை அடைந்துவிட்டது. அது காரணமாக முதலையின் உடல் பளபளவென்று பொன் போல் பிரகாசித்தது. கண்களைக் கூசச் செய்யும் ஒளியைப் பெற்ற முதலை, "தேவி! அவசரப்பட்டு என்ன காரியம் செய்துவிட்டீர்கள்? சற்றுச் சிந்தித்திருக்கக் கூடாதா? எவ்வளவு கஷ்டப்பட்டுக் கடுந்தவம் இயற்றினீர்கள்! எந்த இலட்சியத்தை அடைவதற்காகத் தவம் இயற்றினீர்கள்! அப்படிப் பட்ட அளப்பரிய மகத்தான தவத்தை அளித்து விடுவது தங்களுக்குத் தகுந்ததல்ல. எனினும் தாங்கள் இந்த ஏழை அந்தணச் சிறுவனிடம் காட்டிய இரக்கத்தையும், திக்கற்ற எளியவர்களிடம் தாங்கள் கொண்டுள்ள இளகிய மனதையும் கண்டு களிப்படைகிறேன். தாங்கள் எனக்கு அளித்த தவப் பயனையும் சிறுவனின் உயிரையும் திரும்பவும் வரமாக நான் உங்களுக்கே அளித்துவிடுகிறேன்; எடுத்துக்கொள்ளுங்கள்" என்று தேவியிடம் தெரிவித்தது.



தேவி முதலையைப் பார்த்துக் கூறினாள்: "முதலையரசே! என் உயிரைக் கொடுத்தாவது சிறுவனைக் காப்பாற்ற வேண்டியது என் தலையாய கடமை. தவத்தின் பலன் போய்விட்டால் மறுபடியும் தவம் செய்துகொள்ளலாம். ஆனால் சிறுவன் இறந்து போய்விட்டால் மீண்டும் அவன் உயிரைத் திரும்பப் பெற முடியுமா? ஆகவே பாலகனைக் காப்பதற்காகவே நன்கு சிந்தித்து இந்த முடிவிற்கு வந்தேன். ஒரு முறை பிறருக்கு அளித்த பொருளைத் திரும்பப் பெறும் வழக்கம் எனக்கு இல்லை. ஆகவே, மனமுவந்து நான் தரும் என் தவங்களையும் புண்ணியங்களையும் ஏற்றுக்கொண்டு தயைகூர்ந்து சிறுவனை விட்டுவிடுங்கள்."

தேவியின் வேண்டுகோளைக் கேட்ட முதலை சிறுவனை விட்டுவிட்டுத் திடீரென்று மறைந்துவிட்டது. தேவியும் சிறுவனை அன்புடன் வழியனுப்பிவிட்டு, தவம் முழுவதும் போய்விட்டதனால் மீண்டும் தவமியற்றும் எண்ணத்துடன் அமர்ந்தாள்.

அப்போது சிவபெருமான் பார்வதியின் முன் தோன்றி, "தேவி! இனியும் நீ தவம் இயற்ற வேண்டிய அவசியமே இல்லை. நீ உன் தவப் பயன்களை எனக்குத்தான் கொடுத்தாய். முதலையாகவும் சிறுவனாகவும் வந்து நானேதான் உன்னைச் சோதித்தேன். உன் பெருமையையும் இரக்க குணத்தையும் சோதிக்கவே நான் இந்த விளையாட்டைச் செய்தேன். புண்ணியத்தைத் தானம் செய்வதனால் மேலும் மேலும் அது பெருகி, தானம் செய்த

வரையே அது அடைகிறது. இதோ பார்! நீ எனக்கு அளித்த தவமும் புண்ணியமும் பல ஆயிரம் மடங்காக உனக்குப் பெருகியிருக்கின்றன. அவை இனி எந்நாளும் குறையவேமாட்டா'' என்று கூறித் தேவியுடன் கயிலைக்குச் சென்றார்.

பார்வதிதேவியின் அருளுடைமை பற்றிப் புராணம் குறிப்பிடும் இந்தக் கதை, தமது எலும்பையே பிறர்பொருட்டு வழங்கிய உத்தம முனிவர் ததீசியின் தியாகத்தை நினைவுபடுத்துகிறது; திருக்குறளில் இடம் பெற்றுள்ள 'அன்புடைமை', 'அருளுடைமை' அதிகாரங்களையும் நினைவுபடுத்துகிறது.

''அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வர்; அன்பு உடையவர் தம் உடம்பையும் பிறருக்கு உரிமையாகி வாழ்வர்'' என்று அன்புடைமை அதிகாரத்தில் கூறும் வள்ளுவர், ''தன் உயிரின் பொருட்டு அஞ்சி வாழ்கிற தீவினை, உலகில் நிலைபெற்றுள்ள மற்ற உயிர்களைப் போற்றி அருளுடையவனாக இருப்பவனுக்கு இல்லை'' என்று அருளுடைமை அதிகாரத்தில் கூறுகிறார்.

ஜபம், தியானம் போன்ற ஆத்மசாதனங்களைப் பழகும் சாதகன் அவற்றைச் செய்து முடித்தான பிறகு, முடிவில் அவற்றின் பலன்களையும் இறைவனின் திருவடிகளில் அர்ப்பித்துவிட வேண்டும் என்று பெரியோர் கூறியிருக்கிறார்கள். ''குந்தியின் மகனே, நீ எதைச் செய்தாலும், எதைப் புசித்தாலும், எதை ஹோமம் செய்தாலும், எதைத் தானம் செய்தாலும், எந்தத் தவம் செய்தாலும் அதை எனக்கு அர்ப்பணமாகச் செய்வாய்'' என்பது கண்ணனின் கீதைவாக்கு.

கதையில் பார்வதிதேவி, தவத்தையும் புண்ணியத்தையும் தானம் செய்ததனால் பல மடங்காக அவை பெருகியதாகச் சிவபெருமான் கூறியதைப் பார்த்தோம். இதே கருத்தை, சமீப காலத்தில் வாழ்ந்த பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரும் தெரிவித்திருக்கிறார். அவற்றில் சில வருமாறு:—

''பக்தன் பகவானை நோக்கி ஓர் அடி வைத்தால் பகவான் பக்தனை நோக்கிப் பத்து அடி வருகிறார்.''

''நீ ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய்யும் பொருள் எல்லாம் ஆயிரம் மடங்காக உனக்குத் திருப்பிக் கொடுக்கப்படும். ஆதலால் நீ செய்யும் சத்கர்மங்களின் பலன் எல்லாம் 'கிருஷ்ணார்ப்பணமாகட்டும்' என்று கருதி, ஒரு கை ஜலம் அள்ளிவிட வேண்டும்.

''யுதிஷ்டிரர் தம்முடைய பாவங்களையும் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவுக்கு அர்ப்பணம் செய்யப் போனபோது, 'அப்படிச் செய்யாதீர்கள்; கிருஷ்ணனுக்கு அர்ப்பணம் செய்யும் பொருள்கள் எல்லாம் ஆயிரம் மடங்காகி உம்மிடமே திரும்பி வரும்' என்று சொல்லி, பீமசேனன் தடுத்தான்.''

இறைவனுக்கு அர்ப்பிப்பது பல ஆயிரமாகப் பெருகும் என்பது உண்மைதான். ஆனால் அவ்விதம் பிரதிபலனையும் எதிர்பாராமல் செய்யும் தவத்தையும் புண்ணியச் செயல்களையும் இறைவனுக்குச் சமர்ப்பிப்பதுதான் எல்லா விதத்திலும் சரியானது. அப்படித்தான், முக்தி உட்பட எந்த விதப் பிரதிபலனையுமே எதிர்பாராமல் ஆண்டவனிடம் பக்திக்காகவே பக்தி செலுத்துபவர்கள் செய்து வருகிறார்கள். அத்தகைய பக்தியைப் பெற்றவன் வாழ்க்கையின் இலட்சியத்தையே அடைந்தவன் ஆவான். அவனை, அவனே ஏற்றுக்கொள்ளத் தயங்கினாலும் ஆண்டவன் தனது நிலைக்கு உயர்த்தி விடுகிறான்.

''ஜீவாத்மாவால் பரமாத்மாவுடன் இரண்டறக் கலக்க முடியும். அப்போதுதான் ஒருவன் 'அவனே நான்' என்று உணர்ந்து சொல்லக்கூடும். ஒரு வீட்டில் நெடுநாளாக வேலை செய்து வந்த வேலைக்காரன் ஒருவன், நாளடைவில் அந்த வீட்டார்களுள் ஒருவனாகவே பாவிக்கப்படலாம். வீட்டு எஜமானன் இவனுடைய வேலைத்திறமையையும் உண்மை உள்ளத்தையும் கண்டு மகிழ்ந்து, ஒரு நாள் அவனைத் தன்னுடைய ஆசனத்தில் உட்காரச் செய்து தன்னைச் சுற்றியுள்ளவர்களை நோக்கி, 'இந்தக் கணம் முதல் எனக்கும் இவனுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. நானும் இவனும் ஒன்று. என் கட்டளைக்குக் கீழ்ப்படிவதைப் போலவே இவனுடைய கட்டளைக்கும் நீங்கள் கீழ்ப்படிய வேண்டும். இல்லாவிட்டால் தண்டிப்பேன்' என்று சொல்லலாம். அப்போது அந்த வேலைக்காரன் ஸங்கோசத்தினால் இந்தப் புதிய கௌரவத்தைக் காட்டிக்கொள்ளத் தயங்கலாமானாலும், எஜமானன் அவனைக் கட்டாயப்படுத்தி, கௌரவ ஸ்தானத்தில் வைப்பான். ஈசுவரனை நெடுங்காலம் வழிபட்டு அவனுடன் ஐக்கியமான தன்மையை உணர்ந்த ஜீவர்களுடைய நிலைமையும் இப்படிப்பட்டதுதான். ஈசுவரன் தன் மகிமையையும் குணங்களையும் இவர்களுக்கு அருளி, இவர்களைத் தன் ஒப்பற்ற ஸ்தானத்துக்கு உயர்த்துகிறான்.''

—பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்

# எனது பழைய நினைவுகள்

சுவாமி விஞ்ஞானனந்தர்



**ஸ்ரீராமகிருஷ்ணருடன் பழகிய ஒவ்வொருவருடைய அனுபவமும் சுவை நிரம்பியது. சுவாமி விஞ்ஞானனந்தர், தாம் கண்ட குருதேவரைப் பற்றி தெரிவிக்கிறர்.**

நான் முதலில் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பார்த்தபோது எனக்குப் பதினன்கு அல்லது பதினைந்து வயது இருக்கும். அவருடன் எனது சந்திப்பு, பின்வரும் முறையில் அமைந்தது.

ஒரு நாள் நான் என் நண்பன் ஒருவனுடைய வீட்டில் விளையாடிக்கொண்டிருந்தேன். அப்போது எங்கள் இருவருக்கும் அறிமுகமான ஒரு நண்பன் வந்து, ''நீங்கள் பரமஹம்சரைக் காண விரும்பு கிறீர்களா?'' என்று கேட்டான்.

''அவர் எங்கே இருக்கிறர்?'' என்று நாங்கள் விசாரித்தோம்.

''அருகிலேயே, திவானின் வீட்டில் இருக்கிறர்'' என்று அவன் பதில் சொன்னன்.

எங்களுக்குப் பரமஹம்சர் என்றல் எப்படி இருப்பார் என்பது ஒன்றும் தெரியாது. என்றலும் நாங்கள் அனைவரும் அவரைப் பார்க்கச் சென்றேம். நாங்கள் திவான் வீட்டுக் கூடத்தை அடைந்த போது அங்கே சிலர் இனிமையான குரலில் பாடிக்கொண்டிருந்ததைக் கேட்டோம். அங்கு நாங்கள் ஓர் அதிசயக் காட்சியைக் கண்டோம்.

பக்தர்கள் ஒரு கூட்டமாக அமர்ந்து பாடிக்கொண் டிருந்தார்கள். ஸ்ரீராமகிருஷ்ணர் புறச் சூழ்நிலையை அறவே மறந்த நிலையில் நடுநாயகமாக உட்கார்ந் திருந்தார். அவரை ஒரு பக்தர் விழுந்துவிடாமல் தாங்கிக்கொண்டிருந்தார். பரமஹம்சரின் முகத்தில் தெய்விக ஒளி பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவரது இதழ்களில் புன்னகை தவழ்ந்துகொண் டிருந்தது. அவருடைய கண்கள் ஏதோ ஒன்றை உற்று நோக்கியபடி காணப்பட்டன. அவர் தெய்விக ஆனந்தக் கடலில் மூழ்கியவராகக் காணப் பட்டார்.

சிறிது நேரத்துக்குப் பிறகு பரமஹம்சர் தெய்விக அன்னையைக் குறித்து ஒரு பாட்டுப் பாடினர். அவர் இன்னும் பரவச நிலையிலேயே இருந்தார். அவர் ஜகன்மாதாவை நேரில் பார்த்தபடியே அவளுக்கு முன்னல் பாடிக்கொண்டிருப்பதாக எனக்குத் தோன்றியது. பாடல் முடிந்தபிறகு ஸ்ரீராமகிருஷ்ண ரும் அவருடைய நண்பர்களும் அந்த வீட்டுக் காரரால் மாடிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். நாங்களும் வீட்டுக்குத் திரும்பிவிட்டோம்.

மற்றெரு முறை நான் ஸ்ரீராமகிருஷ்ணரை மணி மல்லிக்கின் வீட்டில் சந்தித்தேன். அங்கு என் பள்ளித் தோழராகிய சரத்துடன் சென்றிருந்தேன்.

பல ஆண்டுகள் உருண்டோடின. எனக்குப் பதி னேழு அல்லது பதினெட்டு வயது இருக்கும். அப்போது நான் கல்கத்தாவில் புனித சேவியர் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தேன். ஒரு நாள் ஸ்ரீராமகிருஷ்ணரைத் தரிசிப்பதற்காகத் தட்சிணேசு வரம் சென்றேன். அப்போது பகல் வேளை; பல பக்தர்கள் அவருடைய அறையில் உட்கார்ந்திருந் தார்கள். நான் உள்ளே சென்று ஸ்ரீகுருதேவரை வணங்கிய பிறகு ஒரு மூலையில் அமைதியாக உட்கார்ந்தேன்.

சிறிய கட்டிலில் அமர்ந்து ஸ்ரீராமகிருஷ்ணர் பக்தர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார். தோற்றத்தில் அவர் சாதாரண மனிதர்களைப் போலக் காணப்பட்டாலும் அவருடைய புன்னகையில் ஓர் அற்புதமான தெய்விகம் கமழ்ந்தது. அவர் சிரித்த போது அவரது முகத்திலும் கண்களிலும் மட்டு

மின்றி அவர் உடல் முழுவதும் ஆனந்தம் தவழ்ந்தது. அவருடைய இனிய ஆனந்தப் புன்னகை அவரைக் கண்டவர்களுடைய சோர்வை யும் துயரையும் அறவே அழித்துவிடும். அவரது குரல், சலிப்பே இல்லாமல் எப்போதும் கேட்டுக் கொண்டே இருக்கும் வகையில் மிகவும் இனிமை யாக இருந்தது. அவர் கண்கள் கூர்மையாகவும், பிரகாசமாகவும், அவருடைய பார்வை குளுமையாக வும் அன்பு ததும்புவதாகவும் அமைந்திருந்தன.

ஸ்ரீராமகிருஷ்ணரின் அறை முழுவதும் ஆழ்ந்த தெய்விக அமைதி கமழ்வதை நான் உணர்ந்தேன். கூடியிருந்த பக்தர்கள் ஸ்ரீகுருதேவரின் வாயி லிருந்து வரும் அமுதமொழிகளைப் பருகி ஆனந்தக் களிப்பில் ஆழ்ந்திருந்தார்கள். அவர் அப்போது சொன்ன விஷயங்கள் எனக்கு இப்போது நினைவில் இல்லை. என்றாலும் அந்தச் சமயத்தில் நான் அடைந்த தெய்விகப் பரவச நிலை, நேற்று நடந்ததைப் போலவே இப்போதும் என் உள்ளத் தில் பசுமையாக இருக்கிறது. நான் அவரிடம் ஒன்றும் கேட்கவில்லை. அவரும் என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை. பக்தர்கள் ஒவ்வொருவராக விடை பெற்றுச் செல்ல ஆரம்பித்தனர்.

நான் அவருடன் தனிமையில் இருப்பதை உணர்ந்தேன். ஸ்ரீராமகிருஷ்ணர் என்னை உற்று நோக்கியபடி இருந்தார். நான் விடைபெற்றுச் செல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று நினைத்துக்கொண்டு அவரை நமஸ்கரித்தேன். நான் புறப்படத் தயாராக இருந்தபோது அவர், ''உனக்கு மற்போர் செய்யத் தெரியுமா? வா, நீ எப்படி மற் போர் செய்கிறாய் என்று நான் பார்க்கிறேன்'' என்று சொல்லிக்கொண்டே என்னை நெருங்கினார். எனக்கு மிகவும் ஆச்சரியம் ஏற்பட்டது. 'இவர் என்ன, புது மாதிரியான சன்னியாசியாக இருக் கிறாரே!' என்று நினைத்தபடி, ''என்னால் மற்போர் செய்ய முடியும்'' என்று பதில் சொன்னேன்.

ஸ்ரீராமகிருஷ்ணர் புன்னகையுடன் என்னை நெருங்கினார். என் கைகளைப் பிடித்து என்னைத் தள்ள ஆரம்பித்தார். ஆனால் நான் வலிமை மிக்க இளைஞனாக இருந்ததனால் அவரைச் சுவரோடு இணைத்துத் தள்ளினேன். அவர் சிரித்துக்கொண்டே என்னைப் பலமாகப் பிடித்தபடி நின்றார். அப்போது அவருடைய கைகளிலிருந்து மின்சாரம் போன்ற சக்தி வெளிவந்து என்னுள் புகுவதை உணர்ந்தேன். அந்த உணர்வு என் சக்தி அனைத்தையும் எடுத்து என்னைச் சோர்வுறச் செய்தது. எனது உடம்பு முழு வதும் மயிர்க்கூச்செறிந்து ஒருவிதப் பரவச நிலை ஏற்பட்டது.

பிறகு ஸ்ரீராமகிருஷ்ணர் தமது பிடியைத் தளர்த் தினார். புன்னகையுடன், ''நீயே வெற்றி யடைந்தாய்'' என்று சொன்னார். பிறகு எனக்குச் சில இனிப்புப் பண்டங்களைப் பிரசாதமாகக் கொடுத்தார். நான் கல்கத்தா திரும்பினேன்.

பல நாட்கள் அந்தத் தெய்விகம் ததும்பிய ஆனந்த அனுபவம் என்னுள் இருந்துகொண்டே யிருந்தது. அவர் எனக்கு ஆன்மிகச் சக்தியைக் கொடுத்திருக்கிறார் என்று உணர்ந்தேன்.

ஸ்ரீராமகிருஷ்ணர் எப்போதும் எங்களுடைய நலன்களில் பெரிதும் அக்கறை காட்டியபடி இருந் தார். அவருடைய சீடர்களுள் யாராவது சிறிது காலம் வராமலிருந்தால், அந்தச் சீடரைப் பற்றி வேறு யார் மூலமாயினும் விசாரித்து அனுப்புவார்.

ஒரு சமயம் நான் பல நாட்களாக வராமலிருந் தேன். ஆகவே என்னைப் பற்றி ஸ்ரீகுருதேவர் விசாரித்தனுப்பினார். நான் அவருடைய அறையை அடைந்தவுடன் அன்பு நிறைந்த மனத்தாங்கலுடன், ''நீ எப்படி இருக்கிறாய்? என்ன விஷயம்? ஏன் பல நாளாக உன்னை நான் பார்க்க முடியவில்லை?'' என்று கேட்டார்.

''எனக்கு வர வேண்டும் என்று தோன்ற வில்லையே!'' என்று உண்மையைச் சொன்னேன்.

''பரவாயில்லை. ஆனால் நீ தொடர்ந்து தியானம் பயிற்சி எல்லாம் செய்துகொண்டிருக்கிறாய் என்று நினைக்கிறேன்'' என்று புன்னகையுடன் கூறினார்.

''ஐயா, நான் தியானம் செய்ய முயலுகிறேன். ஆனால் என்னால் முடியவில்லை'' என்று நான் அவ ரிடம் தெரிவித்தேன்.

ஸ்ரீகுருதேவர் என்னுடைய பதிலைக் கேட்டு வியப்பு அடைந்தவராகத் தோன்றினார். ''நீ என்ன சொல்கிறாய்? உன்னால் தியானம் செய்ய முடிய வில்லையா? நிச்சயமாக உன்னால் முடியும்'' என்று சொல்லிச் சிறிது நேரம் மௌனமாக இருந்தார்.

வேறு ஏதாவது அவர் சொல்வார் என்று எதிர் பார்த்தபடி நான் அவரைப் பார்த்துக்கொண்டிருந் தேன். அப்போது அவருடைய முகத்திலும் கண்களி லும் ஒருவித மாறுதல் தோன்றுவதைக் கவனித் தேன். சிறிது நேரம் என்னை உற்று நோக்கிவிட்டு,

''நீ என் அருகில் வா'' என்று சொன்னார். நான் அவரருகில் சென்றவுடன், என் நாக்கை நீட்டச் சொல்லி, அதில் தமது கைவிரல்களால் ஏதோ எழுதினார். அதன் விளைவாக விவரிக்க முடியாத பேரின்பம் என்னுள் கிளர்ந்து என் உடல் நடுங்க ஆரம்பித்தது.

''பஞ்சவடிக்குச் சென்று அங்கே தியானம் செய்'' என்று அவர் கூறினார். நடப்பதற்குச் சற்றுக் கஷ்டமாக இருந்தாலும் நான் மெதுவாகப் பஞ்சவடியை அடைந்தேன். அவருடைய ஸ்பரிசத்தால் நான் இன்பப் போதையை அடைந்திருந்தேன். தியானத்தில் அமர்ந்ததும் என் புறஉணர்வு முற்றும் மறைந்து போய்விட்டது.

நான் மீண்டும் என் பழைய நிலைக்கு வந்தபோது ஸ்ரீராமகிருஷ்ணர் என் அருகில் அமர்ந்து எனது உடலைத் தமது கரங்களால் இதமாகத் தடவிக் கொண்டிருந்ததைக் கண்டேன். அப்போது அவருடைய முகத்தில் தெய்விக ஒளியுடன் கூடிய புன்னகை தவழ்ந்துகொண்டிருந்தது. என்னுள் இருந்த இன்பப்போதை இன்னும் முழுவதும் மறையவில்லை.

''உன்னுடைய தியானம் எப்படி இருந்தது?'' என்று அவர் என்னைக் கேட்டார்.

''மிகவும் அருமையாக இருந்தது'' என்று பதில் கூறினேன்.

''இனிமேல் உனக்கு எப்போதுமே ஆழ்ந்த தியானம் கைகூடும். ஏதாவது தெய்விகத் தோற்றங்களைக் கண்டாயா?'' என்று அவர் கேட்டார்.


என்னால் இயன்ற வரையில் என் அனுபவங்களை அவரிடம் தெரிவித்தேன். பிறகு அவரைத் தொடர்ந்து சென்று அவருடைய அறையில் அவருடன் தனிமையில் இருந்தேன். அன்றைய தினம் என்னுடன் அவர் நீண்டநேரம் பேசிப் பல ஆன்மிக அறிவுரைகளைக் கூறினார்.

ஸ்ரீராமகிருஷ்ணருடைய அருள் எல்லையற்றது. அதற்கு ஈடு இணையே கிடையாது. தம்முடைய ஒப்பற்ற அன்பால் எங்கள் அனைவரையுமே அவர் தம்முடையவர்களாக ஆக்கிக்கொண்டார்.

சிறிது காலத்திற்குப் பிறகு நான் பட்னாவில் இருக்கும் பாங்கிபூருக்குச் சென்றேன். ஒரு நாள் இரவு, ஸ்ரீராமகிருஷ்ணரை என் முன் தெய்விகத் தோற்றத்தில் கண்டேன். ஏன் அப்படி அவரை நான் காண நேர்ந்தது என்பது அப்போது எனக்குப் புரியவில்லை. மறுநாள் காலையில் அவர் மகாசமாதியடைந்துவிட்டார் என்ற செய்தி எனக்கு எட்டியது.

---

# நவராத்திரி



ராவணனைக் கொல்ல முடியாமல் ராமர் தவித்தபோது அவரிடம் ஜகன்மாதாவை வழிபடுமாறு பிரம்மா கூறினார்.

எப்போதும் யோகநித்திரையில் ஆழ்ந்திருக்கும் தேவி வசந்த காலத்தில் ஒன்பது நாட்கள் மட்டுமே விழித்திருப்பாள். ஆனால் ராம-ராவண யுத்தமோ இலையுதிர் காலத்தில் நடைபெற்றது. அப்படி இருந்தும் ஸ்ரீராமபிரான் தேவியை ஒன்பது நாட்கள் ஆராதித்தார்.

பத்தாவது நாள் ஜகன்மாதா தோன்றி, இராமபிரானுக்கு அனுக்கிரகம் செய்தாள். அதன்பிறகு ஸ்ரீராமசந்திரமூர்த்தி ராவணனைக் கொன்றார்.

ராவணனை இராமபிரான் வென்ற அந்தப் பத்தாவது நாளை விஜயதசமியாக (வெற்றித் திருநாளாக), ராமராஜ்யம் மீண்டும் நிலைபெற்றதற்காக மக்கள், கொண்டாடி மகிழ்ந்தார்கள். இதையொட்டியே 'சாரதிபூஜை' என்றும் சொல்லப்படும் நவராத்திரியையும் விஜயதசமியையும் இன்றும் நாம் கொண்டாடுகிறோம்.

ராம-ராவண யுத்தம் எங்கோ எப்போதோ நடந்தது அல்ல. நமக்கு உள்ளேயும் வெளியேயும் இடையறாமல் நடைபெற்றுக்கொண்டு இருக்கும் ஆன்மிக யுத்தமே அது. இதில் ஆன்மாவே இராமபிரான்; 'தான்' என்னும் அகமே ராவணன். நாம் பெரும் பற்றுதலுடன் வளர்த்துக்கொண்டிருக்கும் 'தான்' என்னும் ராவணனாகிய அகம் நமது அமைதியை எல்லாம் குலைத்துக்கொண்டு இருக்கிறது. அதை நம்முள் இருக்கும் 'ஆன்ம' ராமனை அடைந்து, 'தான்' என்ற அகங்கார ராவணனை அழிப்போமேயானால் அதுதான் உண்மையான விஜயதசமி ஆகும். யான், எனது என்ற அகத்தை ஒழித்து ஆத்மனை அறிந்தால் மட்டுமே உள்ளமைதியைப் பெற முடியும். எனவே அபிமான அகங்காரத்தை ஒழித்து ஆத்மாராமர் ஆகுங்கள் என்று விஜயதசமி உணர்த்துகிறது.

—சரஸ்வதி



# வள்ளலாரும் சத்திய ஞானசபையும்




நா. மகாலிங்கம்
இராமலிங்கர் பணிமன்றத் தலைவர்


திருவள்ளுவர், திருமூலர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், பட்டினத்தார், தாயுமானவர் என்று வாழையடி வாழையாக வரும் திருக்கூட்ட மரபில் சென்ற நூற்றாண்டில், நம் செந்தமிழ் நாட்டில் வந்து உதித்து, திருவருட்பிரகாச வள்ளலார் என்று புகழ் பெற்றவர் இராமலிங்க அடிகள். அவர் உத்தரஞான சிதம்பரம் என்னும் வடலூரில் மூன்று நிலையங்களை நிறுவியிருக்கிறார்.

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தை 1865-ஆம் ஆண்டில் ஆரம்பித்தார். 1867-ஆம் ஆண்டில் சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச் சாலையைத் தொடங்கினார். 1872-ஆம் ஆண்டில் சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானசபை நிறுவினார். 1870-ஆம் ஆண்டு முதல் அடிகளார் மேட்டுக்குப்பம் என்ற சிறு கிராமத்தில் இருக்கும் சித்திவளாகத் திருமாளிகை என்னும் சிறுகுடிலில் தங்கி வரலானார்.

இந்த மூன்று நிறுவனங்களையும் சித்திவளாகத்தையும் இன்று 'திருவருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையங்கள்' என்ற பெயரில் இந்து அறநிலையப் பாதுகாப்புத் துறையினர் நிருவகித்து வருகின்றனர்.

தமிழ்நாட்டில் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் சிதம்பரத்திற்கு வடமேற்கே சுமார் 16 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள மருதூர் என்ற கிராமத்தில் 1823-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் ஐந்தாம் நாள் இராமலிங்க அடிகள் பிறந்தார். அவருடைய தந்தையார் இராமையா பிள்ளை. தாயார் சின்னம்மை.

இராமலிங்கர் பிறந்த ஓராண்டுக்குள் அவர் தந்தை காலமானார். குடும்பத்திற்கு வேறு ஆதரவு இல்லாததால் சின்னம்மையார் தாம் பிறந்த ஊராகிய செங்கற்பட்டு மாவட்டத்தில் இருக்கும் பொன்னேரிக்கு அருகில் உள்ள சின்னக்காவனம் என்ற ஊரில் தம் பிள்ளைகளோடு குடியேறினார்; சில ஆண்டுகளுக்குப் பின்னால் மூத்த மகன் சபாபதியின் தலைமையில் குடும்பம் சென்னையில் குடியேறியது.

சிறுவர் இராமலிங்கத்திற்குத் தமையன் சபாபதி ஆரம்பக் கல்வியைக் கற்பித்தார். மேற்கல்வி பயிலப் பேராசிரியர் ஒருவரிடம் அனுப்பியபோது இராமலிங்கர் அவரிடம் கல்வி கற்பதில் கவனம் செலுத்தவில்லை. உலகியற் கல்வியில் வள்ளலாருக்கு நாட்டம் இல்லை. இறைவனைப் பற்றிப் பாடுவதிலேயே ஈடுபட்டார். கற்க வேண்டியவற்றை எல்லாம் இறைவனிடமே கற்றார்.

அவருடைய ஒன்பதாவது வயதில் திருத்தணிகை முருகப்பெருமானால் ஆட்கொள்ளப்பட்டார். திருத்தணிகை வேலனையும் சென்னைக் கந்தகோட்டத்து முருகப்பெருமானையும் பல பாடல்களில் பாடிப் பரவினார்.

பன்னிரண்டாவது வயது முதல் இராமலிங்கர் தீவிரமாக ஞான வாழ்வைத் தொடங்கினார். சென்னையிலிருந்து திருவொற்றியூர் சென்று வடிவுடை மாணிக்க அம்மை மீதும், தியாகேசப் பெருமான் மீதும் இனிய பாசுரங்கள் இயற்றிப் பாடி வழிபட்டார்.

சென்னை வாழ்க்கை தமது ஞான வாழ்க்கைக்கு ஒத்து வராது என்பதைக் கண்ட அடிகள் சிதம்பரத்திற்குச் சென்றார். சிதம்பரத்திற்கு வடக்கே உள்ள கருங்குழி என்ற சிறிய கிராமத்தில் தங்கினார். கருங்குழியிலிருந்து தினந்தோறும் சிதம்பரத்திற்குச் சென்று இறைவனை வழிபட்டு வந்தார்.

அக்டோபர் 5-ஆம் நாள் திருஅருட்பிரகாச வள்ளலார் தோன்றிய திருநாள். இதன் நினைவாக இந்தக் கட்டுரை வெளியிடப்பெறுகிறது.

இந்த நாட்களில் அவரிடம் சுத்த சன்மார்க்கக் கொள்கை வலுப்பெறத் தொடங்கியது. 'தெய்வம் ஒன்றே' என்னும் கொள்கையை வற்புறுத்தி வரலானுர். சிறு தெய்வ வழிபாடுகளை அறவே வெறுத்தார். சாதி வேறுபாடும் சமய வேறுபாடும் சமுதாயத்திலே சமரச சன்மார்க்க வாழ்வைக் கடைப்பிடிக்க முடியாமல் தடைகளாக இருப் பதைக் கண்டார். அந்தத் தடைகளை நீக்கப் பாடு பட்டார். எவ்வுயிரையும் தம்முயிர் போல் எண்ணி அன்பு செய்ய வேண்டும். அப்படிச் செய்வோர் உள்ளத்திலேதான் இறைவன் தங்கித் திருநடம் புரிவான். இவ்வாறு தம் கருத்துக்களை வள்ளலார் வற்புறுத்தி வந்தார்.

தாம் கண்ட இந்த நெறிக்குச் 'சமரச சுத்த சன்மார்க்கம்' என்று பெயரிட்டார். இந்தச் சன் மார்க்கக் கொள்கையைப் பரப்பும் பணிக்காக ஒரு சங்கத்தை நிறுவினுர். அதுதான் 'சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்'. இதன் பின்பு 'சத்திய தருமச்சாலை', 'சத்திய ஞானசபை' ஆகிய நிலையங் களையும் ஒன்றன்பின் ஒன்ருக நிறுவினுர்.

### சன்மார்க்க சத்திய சங்கம்

தம்மைச் சூழ்ந்திருந்த அன்பர்களைக் கூட்டியே சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தை வட லூரில் அமைத்தார் இராமலிங்க அடிகள். தமிழ் நாட்டில் வள்ளலாருக்கு முன்பு இருந்த அருளா ளர்கள் மடங்களை அமைத்துக்கொண்டுதான் மக்க ளுக்குத் தொண்டு செய்தார்கள். ஆனுல் இராம லிங்கரோ மடம் கட்டவில்லை, சங்கம் கண்டார். அந்தச் சங்கத்துக்குச் 'சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்' என்று பெயரிட்டார்.

### சத்திய தருமச்சாலை

வள்ளலாரின் கொள்கையில் தலையாயது ஜீவ காருண்யம். பசி எல்லா உயிர்களுக்கும் பொது வானது; மிகக் கொடியது. எல்லாத் துன்பங் களுக்கும் மூல காரணம் பசியே. இந்தப் பசி நோயைத் தவிர்ப்பதற்காகவே வள்ளலார் சத்திய தருமச்சாலையைத் தொடங்கி, அங்கு வரும் ஏழை எளிய மக்களுக்கும், தம்மை அடுத்திருந்து ஞான சாதனம் செய்து வந்த அன்பர்களுக்கும் அன்னம் அளித்து வந்தார்.

ஏறக்குறைய நூற்றுப்பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னுல் வள்ளலார் தம் கையாலேயே அடுப்பு மூட்டி ஏழைகளுக்கு அன்னம்பாலிக்கும் திருத் தொண்டைச் சத்திய தருமச்சாலையில் ஆரம்பித்து வைத்தார். அவர் ஆரம்பித்த நாள் முதல் இன்று வரையில் தருமச்சாலையில் தினந்தோறும் நூற்றுக் கணக்கான ஏழைமக்களுக்கு அன்னம் வழங்கப் பட்டு வருகிறது. அவர் மூட்டிய அடுப்பு இன்று வரையில் அணையாது எரிந்துகொண்டு இருக்கிறது. இவை தருமச்சாலையில் இன்றும் நிகழ்ந்து வருகிற அற்புதங்களாகும்.

### சத்திய ஞானசபை

'இறைவன் ஒருவனே. அவன் ஒளி வடிவ மானவன்' என்று கண்ட வள்ளலார் அந்த இறைவ னுக்கு 'அருட்பெருஞ்சோதி' என்று பெயரிட்டார். 'அதனை அடையும் வழி தனிப்பெரும் கருணையே' என்ருர். இந்த அருட்பெருஞ்சோதி ஆண்டவனை வழிபடுவதற்கு என்று அடிகள் அமைத்து அருளி யதுதான் சத்திய ஞானசபை.

சத்திய ஞானசபை அமைக்கப்பட்ட ஊரின் பழைய பெயர் பார்வதிபுரம். இராமலிங்க அடிகள் இதற்கு வடலூர் என்றும் உத்தர ஞான சிதம்பரம் என்றும் பெயர்களைச் சூட்டினுர். வள்ளலார் அருட் பெருஞ்சோதி ஆண்டவனை வழிபடுவதற்கு வழக்கம்போல் 'கோயில்' கட்டாமல் 'சபை' கட்டி யதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 'கோயில்' என்ருல் அதில் குறிப்பிட்ட சமயத்தார்கள்தாம் செல்ல முடியும்; மற்றவர்கள் செல்ல முடியாது. 'சபை'யில் அது போன்ற கட்டுப்பாடுகள் கிடையாது. சாதி மத இன வேறுபாடு இன்றி மனித குலத்தினர் எல்லோரும் வள்ளலார் நிறுவிய சத்திய ஞானசபைக்குச் சென்று வழிபடலாம்.

சத்திய ஞானசபை எண்கோண வடிவமானது; தெற்கு நோக்கியது. சபையின் முன் மண்டபத்தில் கீழ்ப்புறத்தில் பொற்சபையும், மேற்புறத்தில் சிற்சபையும் உள்ளன. எண்கோண வடிவமான ஞானசபைக்குள் பன்னிருகால் மண்டபம் ஒன்றும், நாற்கால் மண்டபம் ஒன்றும், ஒன்றனுள் ஒன்ருக உள்ளன. நாற்கால் மண்டபத்தின் கீழே பூமிக்குள் நில அறையும் இருக்கிறது. இது அப்படியே நமது தலைப் பகுதியைக் குறிக்கும் வகையில் அமைந் துள்ளது.

நாற்கால் மண்டபத்தின் மேலே நடுவில் ஒரு பெரிய அகல்விளக்கு வள்ளலாரால் ஏற்றி அருளப் பெற்றிருக்கிறது. அருட்பெருஞ்சோதி ஆண்டவரை இந்தச் சோதி ஞாபகப்படுத்துகிறது. அந்த அருட் பெருஞ்சோதி ஆண்டவரை மறைத்துக்கொண்டு

ஏழு வெவ்வேறு நிறத் திரைகள் தொங்குகின்றன. ஏழும் மாயத் திரைகள். நம்மிடத்தில் உள்ள அறியாமை ஆகிய மாயத் திரைகள் நீங்கப்பெற்ருல் நமது சிரநடுவில் இருக்கும் ஆன்ம ஒளியாகிய அருட்பெருஞ்சோதியைத் தரிசிக்கலாம் என்பதை எடுத்துக் காட்டுவது சத்திய ஞானசபை. இதை விளக்குவது போல ஏழு திரைகளையும் விலக்கிச் சத்திய ஞானசபையில் ஜோதி தரிசனம் காட்டப் படுகிறது.

அகத்தே தாம் பெற்ற அருட்பெருஞ்சோதி அனுபவத்தைப் புறத்தே ஞானசபையாக அமைத்திருக்கிருர் வள்ளலார். வள்ளலார் சத்திய ஞானசபையை 1871-ஆம் ஆண்டு ஆனித் திங்களில் கட்ட ஆரம்பித்து, ஏழே மாதங்களில் முடித்திருக்கிருர். சத்திய



ஞானசபையில் முதன்முதலில் 1872-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25-ஆம் நாள் தை மாதப் பூசத்தில் ஜோதி தரிசன நித்திய வழிபாட்டையும் தொடங்கி வைத்திருக்கிருர். ஞானசபைக்குள் புகுந்து அருட்பெருஞ்சோதி ஆண்டவனை வழிபடுவதற்கும், வெளியில் இருந்து வழிபடுவதற்கும் சாதி சமயம் முதலிய வேறுபாடுகள் இல்லை. மற்றக் கோயில்களைப் போல மேளதாளங்கள் முதலிய இசைக் கருவிகள், சோறு தேங்காய் பழம் முதலிய நைவேத்தியங்கள், இன்னும் இவை போன்ற வழிபாட்டு முறைகள் ஞானசபை வழிபாட்டில் இல்லை.

சத்திய ஞானசபையில் தினந்தோறும் வழிபாடு நடைபெற வேண்டும் என்றும், அதனுல் ஏற்படும் நன்மைகளையும் சொல்கிருர் வள்ளலார் :—

சித்திபுரத்தே தினந்தோறும் சீர்கொள் அருள்
சத்திவிழா நீடித்துத் தழைத்து ஓங்கி – எத்திசையில்
உள்ளவரும் வந்தே உலகை உறுக! மதத்
துள்ளல் ஒழிக தொலைந்து!

"சித்திபுரம் என்னும் வடலூரில் அமைந்துள்ள சத்திய ஞானசபையில் தினந்தோறும் சோதி தரிசனம் சக்தியைப் பெருக்கும் பெருவிழாவாக நிலைத்து நடைபெற வேண்டும். ஜோதி தரிசனத்தைப் பார்த்து மகிழ்ந்து உயர்வதற்கு என்று உலகில் பல திசைகளிலிருந்தும் மக்கள் நாள்தோறும் திரளாக வருவார்கள்; ஜோதியைத் தரிசித்து மகிழ்வார்கள். இதனுல் மதங்களின் ஆரவாரங்கள் எல்லாம் ஒழிந்து போகும்."

**சித்தி வளாகம்**

சென்னையிலிருந்து சிதம்பரத்திற்கு வந்த வள்ளலார் 1858-ஆம் ஆண்டு முதல் சிதம்பரத்திற்கு அருகிலுள்ள கருங்குழி என்ற கிராமத்தில் தங்க ஆரம்பித்தார். 1867-ஆம் ஆண்டு வடலூரில் சத்திய தருமச்சாலையை ஆரம்பித்தார். இதன் பிறகு தருமச்சாலையிலேயே தங்கி வந்தார்.

நாளடைவில் தருமச்சாலையில் கூட்டம் அதிகமாகி விட்டது. வள்ளலார் அமைதியை நாடி 1870-ஆம் ஆண்டு வடலூருக்குத் தெற்கே நான்கு கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் மேட்டுக்குப்பம் என்ற கிராமத்தில் தாம் தங்கியிருந்த சிறு குடிலுக்குச் 'சித்தி வளாகம்' என்று பெயர் வைத்தார்.

வள்ளலார் சித்தி வளாகத் திருமாளிகையில் இருந்தபோதும் பல உபதேசங்களைச் செய்திருக்கிருர். இங்கு இருந்தபோதுதான் வடலூரில் சத்திய ஞானசபையையும் அவர் நிறுவியிருக்கிருர்.

1873-ஆம் ஆண்டின் கடைசியில் ஒரு நாள் சித்தி வளாகக் குடிலில் தாம் வழிபட்டு வந்த அருட்பெருஞ்சோதி ஆண்டவரின் அருஉருவமான விளக்கைக் குடிலிலிருந்து வெளியே எடுத்து வைத்து, "இதைத் தடைப்படாது ஆராதியுங்கள். இந்தக் கதவைச் சாத்திவிடப் போகிறேன். நான் இப்போது இந்த உடம்பில் இருக்கிறேன். இனி எல்லா உடம்பிலும் புகுந்துகொள்வேன்" என்று திருவாய்மலர்ந்தருளினுர்.

இதன் பின்னர் 1874-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30-ஆம் நாள் வள்ளலார் தமது சித்தி வளாகக் குடிலில் கதவைச் சாத்திக்கொண்டு முத்தேக சித்தி பெற்ருர்; மரணமிலாப் பெருவாழ்வைப் பெற்ருர்.

**வள்ளலார் முத்தேக சித்திக்குப் பின் சத்திய ஞானசபை வரலாறு**

அருட்பிரகாச வள்ளலார் ஞானசித்தி பெற்று ஏழு ஆண்டுகள் முடிந்தன. இதற்குப் பிறகு

1881-ஆம் ஆண்டில் ஏழு பேர் கொண்ட ஒரு குழுவினர் கூடித் தாங்கள் விரும்பியபடி சில மாற்றங்களுடன் கூடிய வழிபாட்டு முறைகளை வகுத்துச் செயற்படத் தொடங்கினர். மாதப் பூசத்தின்போது அரைஜோதி தரிசனமும், தை மாதத்தின்போது முழுஜோதி தரிசனமும் ஞானசபையில் காட்டுவது என்று தீர்மானித்துச் செயற்படத் தொடங்கினர். இந்த வழிபாட்டு முறை வள்ளலார் வகுத்துக் கொடுத்த முறையல்ல. வள்ளலார் நாள்தோறும் ஆறு காலமும் ஜோதி வழிபாடு நடைபெற வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். இப்போது ஞானசபையில் நடைபெற்று வரும் வழிபாட்டு முறை 97 ஆண்டுகளுக்கு முன்னால் அமைந்த ஒரு குழுவினரால் தங்கள் விருப்பமாக மாற்றி அமைத்துக்கொண்ட வழிபாட்டு முறைதான்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னால், திருமுருக கிருபானந்தவாரியார், வள்ளலார் அமைத்த சத்திய ஞானசபைக்குத் திருப்பணி செய்தார். மீண்டும் ஞானசபைத் திருப்பணி செய்ய வேண்டிய அவசியம் வந்துவிட்டது. அதற்காக ஞானசபைத் திருப்பணிக் குழு ஒன்று என் தலைமையில் 1967-ஆம் ஆண்டு அமைக்கப்பெற்றது. தமிழ்மக்கள் ஒரு ரூபாயிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வரையில் நன்கொடை வழங்கினார்கள். இந்த நன்கொடைகளைக் கொண்டு சுமார் ஏழு லட்ச ரூபாய் செலவில் ஞானசபைத் திருப்பணி பூர்த்தி அடைந்திருக்கிறது. ஞானசபைத் திருப்பணி நிறைவு விழாவும், புதுப்பிக்கப்பெற்ற ஞானசபையில் ஜோதி தரிசனமும் 1977-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மிகச் சிறப்பாக நடைபெற்றன.

அருட்பெருஞ்சோதி ஆண்டவரின் தனிப்பெருங் கருணையால், சத்திய ஞானசபை வழிபாடு வள்ளலார் விதித்த வழிமுறையில் நடைபெற வேண்டும். இதற்குத் திருவருள் துணைபுரியப் பிரார்த்திக்கிறேன்.

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!
தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!

---

இந்தப் பிரபஞ்சம் முழுவதும் அஞ்ஞானத்தையே ஆதியாகக் கொண்டது. இது ஞானத்தில் கரைந்துவிடும்.

—ஆதி சங்கரர்



நம்பிக்கையுணர்வும் உண்மையும் கொண்ட பிரார்த்தனைகள் மலைகளையும் அசைத்திடும் வலிமை பெற்றன.

—ஏனோன்

பொறுமையும் பேராசையும் கெட்ட நடத்தையும் உள்ளவன், பேச்சினாலோ உடல் மினுமினுப்பினாலோ மட்டும் நல்லவனாகிவிட முடியாது.

—புத்தர்

குற்றம் குறைகளைப் பார்த்துக்கொண்டிருந்தால் ஒரு சுற்றத்தாரும் உனக்குக் கிடைக்கமாட்டார்கள். ஒவ்வொருவருடைய குற்றத்தையுமே பார்த்துக்கொண்டிருப்பதனால் எவரும் நமக்கு நண்பர்களாக இருக்கமாட்டார்கள்.

—ஔவையார்

நீண்டகாலம் நட்புச் செய்தாலும் நண்பர் ஆகாதவர்கள் நண்பர்களல்லர்; பாலைக் காய்ச்சினாலும் சுவை குன்றாதது போல, சுட்டாலும் சங்கு வெண்மை தருவது போல, கெட்டாலும் மேன்மக்கள் பண்பு குறையாதவராக இருப்பார்கள்.

—ஔவையார்

ஒரு தனியிடம் சென்று உயர்ந்த சிந்தனைகள், அமைதி கொடுக்கக்கூடிய சிந்தனைகள், வலிமை தரக்கூடிய சிந்தனைகள், துணிவும் உறுதியும் தரக்கூடிய சிந்தனைகள் இவற்றால் அறிவை நிரப்பிக்கொண்டு தியானம் செய்வதை ஒரே ஒரு நாளும் தவற விடாதே.

—கவியரசர் பாரதி

# ஒற்றுமை நீங்கினுல்



'நரேந்திரன்'

ஒரு வேடன் பறவைகளைப் பிடிப்பதற்காக வலை விரித்து வைத்து மறைவிடத்தில் அமர்ந்திருந்தான். எங்கிருந்தோ இரண்டு பெரிய பறவைகள் வந்து அதில் சிக்கிக் கொண்டன. உடனே அவை இரண்டும் தங்களுக்குள் கலந்து பேசி ஒரு முடி வெடுத்தன. அதன்படி இரண்டு பறவைகளும் வலையைத் தூக்கிக்கொண்டு உயரே பறக்க ஆரம்பித்தன. பறவைகள் வலையில் சிக்கியதைக் கண்டு மகிழ்ந்த வேடன், முதலுக்கே மோசம் போன கதையாக வலையையும் சேர்த்துத் தூக்கிக்கொண்டு பறவைகள் பறந்து போகவே, மிகுந்த வேதனைப்பட்டான். அவன் அந்தப் பறவைகள் பறக்கும் திசையிலேயே அவற்றைத் தொடர்ந்து மிகவும் வேகமாக ஓட ஆரம்பித்தான்.

நடந்த விஷயங்கள் எல்லாவற்றையும் ஒரு ரிஷி தமது ஆசிரமத்தில் உட்கார்ந்த படியே கவனித்துக்கொண்டிருந்தார்.

ரிஷி வேடனை அருகில் அழைத்து, ''அப்பா! பறவைகளோ வலையோடு ஆகாயத்தில் பறந்து சென்றுகொண்டிருக்கின்றன. நீ ஏன் வீணுகச் சிரமப்பட்டு ஓடிக் கொண்டிருக்கிருய்?'' என்று கேட்டார்.

வேடன் ரிஷியிடம், ''பகவானே! இப்போது இந்தப் பறவைகளுக்கு இடையே ஒற்றுமை நிலவுகிறது. ஆகவே கருத்து வேற்றுமையின்றி ஒற்றுமையுடன் ஒரே திசை யில் பறந்துகொண்டிருக்கின்றன. அதனுலேயே என் வலையையும் அவற்றினுல் தூக்க முடிகிறது. ஆனுல் இன்னும் சிறிது நேரத்தில் அவை இரண்டிற்கும் இடையே மன வேற்றுமை ஏற்பட்டுப் பகைமை ஏற்படலாம். நான் அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தை எதிர்பார்த்தே அவற்றைத் தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கிறேன். எப்போது ஒற்றுமை குலைந்து பகைமை காரணமாகச் சண்டை போட்டுக்கொண்டு அவை கீழே விழுமோ அப்போதே நானும் அவற்றைப் பிடித்துவிடுவேன்'' என்று சொல்லிவிட்டுப் பறவை களைத் தொடர்ந்து ஓடத் தொடங்கினுன்.

சிறிது நேரத்தில் வேடன் சொன்னது உண்மையாயிற்று. வலையைத் தூக்கிக் கொண்டு பறந்ததனுல் பறவைகள் சோர்வடைந்தன. அப்போது இளைப்பாறுவதற்காக எங்கே தங்குவது என்பதைக் குறித்து இரண்டு பறவைகளுக்கும் இடையே மன

வேற்றுமை ஏற்பட்டுச் சண்டை தொடங்கியது. சண்டை மூண்டவுடனே அவற்றினுல் முன்பு போலச் சரியாகப் பறக்க முடியவில்லை. பறக்கும் திசைகளும் வேறுபடவே அவை இரண்டுமே தத்தளித்தன. வலையைத் தூக்கவும் அவற்றினுல் முடியவில்லை. வலையின் கனம் தாங்காமல் பறவைகள் இரண்டும் கீழ்நோக்கி விழ ஆரம்பித்தன. என்ருலும் சமாளித்துக்கொண்டு மேலே பறக்க முயற்சி செய்தன. ஆனுல் ஒரு முறை விழுந்தவுடனே வலையில் சிக்கல் ஏற்பட்டுவிட்டது. அது காரணமாக அவற்றின் சிறகுகளும் வலைக்குள் அகப்பட்டுக் கொண்டன. ஆகவே பறப்பது தடைப்பட்டு, அவை இரண்டுமே வலையுடன் பூமியில் விழுந்தன. இதை எதிர்பார்த்தே ஓடி வந்துகொண்டிருந்த வேடன் மகிழ்ச்சியுடன் மிகவும் சுலபமாகப் பறவைகளைக் கைப்பற்றினுன்.

> "ஒன்று பட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
> ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே"

என்ற பாரதியின் கவிதையை, நாம் படித்த இந்த மகாபாரதக் கதை விளக்குகிறது.

# பழம் பெருமை பேசேல்

அது ஓர் அழகிய கிராமம். அங்கு ஒரு சமயம் பரமஞானியாகிய ஒரு துறவி சில காலம் தங்கியிருந்தார். அவர் அனைவரிடமும் அன்புடனும் ஆதரவுடனும் பழகிவந்தார்.

படித்தவர்களும் பாமரர்களும், ஏழைகளும் பணக்காரர்களும், குழந்தைகள் முதல் வயதானவர்கள் வரை துறவியிடம் மனம் விட்டு உண்மையான அன்புடன் பழகி வந்தனர். பண்டிதர்கள் தங்கள் சந்தேகங்களைத் துறவியிடம் கேட்டுத் தெளிவு பெற்றனர். ஏழைகள் அவருடைய நல்லறிவுகளைக் கேட்டுத் தன்னம்பிக்கையுடன் நல்ல முறையில் வாழ்ந்து வரலாயினர்.

ஒரு நாள் அவரிடம் சென்ற தச்சன் ஒருவன் அவரைப் பணிந்து, "சுவாமி, நாங்கள் தேவத்தச்சனுகிய விச்வகர்மாவின் வழிவந்தவர்களாக இருந்தும், எங்களை எல்லோரும் தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதுகிருர்களே, அது ஏன்?" என்று கேட்டான்.

அதற்குத் துறவி பதில் கூறினுர்:—

"முன்னெரு காலத்தில் நீ இப்போது கேட்பதைப போலவே குரங்குகளும் ஒரு கேள்வியைக் கேட்டன. அவை கேட்ட கேள்வி இதுதான்: 'ஸ்ரீ ராமபிரானின் அடிமையும், அரக்கர்களைக் குலைநடுங்கச் செய்யும் வீரதீர பராக்கிரமசாலியுமான எங்கள் முன்னேராகிய ஸ்ரீஆஞ்சனேயரை மனிதர்கள் பயபக்தியோடு வணங்கிப் பூஜிக்கிருர்கள். ஆனுல் எங்களைக் கண்டால் மட்டும் அவர்கள் அடித்து விரட்டுகிருர்களே, அது ஏன்?'

"குரங்குக்குக் கிடைத்த பதில் என்ன? 'நீங்களும் ஸ்ரீஆஞ்சனேயராகவே ஆகி விடுங்கள். மக்கள் உங்களையும் போற்றிப் பணிவார்கள்' என்பதே.

“முன்னோர்களின் பெருமையால் உனக்கு எப்படிப் பெருமை வரும்? விச்வ கர்மாவை உயர்த்திய அதே இயல்புகளையும் தரத்தையும் நீயும் பின்பற்றி உழைத்து வந்தால், அவரைப் போலவே நீயும் பெருமை அடைவாய்.”

# வினைப் பயன்

ஒரு மகான் தமது சீடன் ஒருவனுடன் பக்கத்தில் இருந்த நகரத்தை நோக்கி ஒரு ஏரிகரை வழியாகச் சென்றுகொண்டிருந்தார். வழியில் ஒரு நாகப்பாம்பு காய மடைந்திருந்ததனால் துடித்துக்கொண்டிருந்தது. அதோடு ஆயிரக்கணக்கான எறும்புகள் வேறு, அந்தப் பாம்பை மொய்த்துக்கொண்டிருந்தன. கேட்க வேண்டுமா அது படும் வேதனையை?

ஸர்ப்பத்தின் கஷ்ட நிலையைக் கண்ட சீடன் குருதேவரைப் பார்த்து, “குருதேவா! இந்தப் பாம்பு எவ்வளவு துன்பப்படுகிறது, பார்த்தீர்களா?” என்று கேட்டான்.

அதற்குக் குருதேவர், “மகனே! அவரவர் செய்த வினையின் பயனை அவரவர் அனுபவித்துத்தான் தீர வேண்டும்” என்று பதில் கூறினர்.

சீடன் ஆச்சரியத்துடன் குருவிடம், “இந்தப் பாம்புப் பிறவியிலுங்கூட இவ்வளவு கஷ்டப்படும்படியாக அது என்ன பாவத்தைச் செய்தது?” என்று கேட்டான்.

குரு கூறினர் : “உனக்கு நினைவிருக்கிறதா? சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு முறை இந்த ஏரியின் அருகில் சென்றுகொண்டிருந்தோம். அப்போது ஒரு செம்படவன் மீன்களைக் கொன்றுகொண்டிருந்தான். நீ அவனுடைய செயலைத் தடுத்தாய் அல்லவா?”

அதற்குச் சீடன், “ஆமாம் குருவே! நினைவுக்கு வருகிறது. நான் அவனைத் தடுத்ததற்காக என்னை அவன் கேலி செய்தான்” என்று பதிலளித்தான்.

குரு கூறினர்: “இன்று அந்தச் செம்படவனே பாம்பாகப் பிறந்திருக்கிறன். எந்த மீன்களைக் கொன்றனே அந்த மீன்களே இன்று எறும்பாகப் பிறந்து தங்கள் வஞ்சத்தைத் தீர்த்துக்கொண்டிருக்கின்றன.”

சீடன் மௌனமாகக் குருதேவரைத் தொடர்ந்தான்.

---

அறுவை மருத்துவர்கள் கத்தி எடுத்து அறுப்பதற்கு முன் என்ன செய்கிறர்கள்? கையையும் கத்தியையும் கழுவிச் சுத்தமாகத் துலக்கிக் கொண்ட பிறகே வேலையைத் தொடங்குவார்கள். அப்படியே பொதுப் பணித் திட்டங்கள் போடுகிறவர்கள் முதலில் மனத்தை தூய்மை செய்து கொள்ளவேண்டும்.

—சுவா[illegible]





# சைவசமயம் கூறும் நான்கு நெறிகள்

பேராசிரியர் ப. இராமன், எம்.ஏ.

வேதாந்தக் கொள்கையும் சித்தாந்தக் கொள்கையும் மாறுபட்டவை என வாதிப்போர் அதிகம். மெய்யுணர்வு பெற்ற அனுபூதிமான்கள் இரண்டிலும் ஒற்றுமையே காண்கின்றனர். ஞானப் பாலுண்டு பிள்ளைப் பருவத்திலேயே திருப்பெருகு சிவ ஞானத்தைப் பெற்ற ஆளுடைய பிள்ளையும், "வேதநெறி தழைத்தோங்க, மிகு சைவத்துறை விளங்கி" என்ற திருப்பாட்டால் தெளிவுறுத்துகிறார். தாயுமானாரும், "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை" என்று அறிவித்துள்ளார். இறைவன் தமருகத்திலிருந்து வேதம் பிறந்தது என்பர். அவனே சைவாகமங்களையும் செய்தருளினன் என்பர். வேதத்தில் இலைமறை காயாகச் சொல்லப் பெற்ற உண்மைகளை எவரும் எளிதில் அறிந்து கொள்ள முடியாது. ஆகையால், உண்மைகளை எளிதில் உணர்த்த ஆகமங்களும் சாத்திரங்களும் தோன்றின. முதற்கண் வேதநெறிக்கும் சைவ நெறிக்கும் வேற்றுமை இல்லை என்பதை உணர்ந்தால் சைவ சாத்திரம் கூறும் நான்கு நெறிகளும் வேதநெறிக்கு முரண்பட்டவை அல்ல என்ற உண்மையையும் உணரலாம். சுருங்கக் கூறின், சைவசாத்திரம் கூறும் சரியை கிரியை ஆகிய இரண்டும் வேதத்தின் பிரிவான கர்மகாண்டத்தில் அடங்கும். யோகமும் ஞானமும் ஞானகாண்டத்தில் அடங்கும்.

மேலும், சைவசாத்திரம் கூறும் முப்பொருள் உண்மையை (பதி, பசு, பாசம்) வேதமும் கூறுவதைக் காணலாம். எவ்வாறெனின், யஜுர் வேதத்தில் பிருகதாரண்யக உபநிடதத்தில் 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' எனக் கூறுவது காண்க. இங்கு அஹம்—நான் (உடம்போடு கூடிய நான்) ப்ரஹ்மாஸ்மி—பிரம்மத்தை அறிந்து பிரம்மமாக இருக்கிறேன் என்பது பொருளாம். நான்—ஆன்மா, பிரம்மம்—பதி என அறியலாம். பதியை அறிந்து கொள்ளத் தடையாக இருந்தது பாசம் என்பது உட்கிடக்கை. இதனால் பதி பசு பாசம் என்ற முப்பொருளையும் வேதம் உணர்த்துகிறது என்க. இந்தச் சான்றே போல் சாமவேதத்தில் சாந்தோக்ய உபநிடதத்தில், 'தத் த்வமஸி' என வருகிறது. இதனைத் 'தொந்தத்தசி' எனவும் கூறுவர். தத் த்வம் அஸி—தத்-அது; த்வம்-நீ; அஸி-ஆயினை. நீ உன்னை அறிந்துகொண்டு அதுவாகிய பரசிவம் ஆயினை. இங்கு, நீ என்றது பசு, அது என்றது பதி என அறியலாம். பாசமே பதியைப் பார்க்க முடியாதவாறு பசுவை அறியாமையில் ஆழ்த்தியது. இதனால் பதி பசு பாசம் வேதத்தில் கூறப்பட்டதென்றே கொள்க.

சைவாகமங்களில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நெறிகளும் கூறப்பட்டுள்ளன. மூலன் செய்த மூவாயிரம் தமிழ் என்னும் திருமந்திரம் இந்த நான்கு நெறிகளை உணர்த்தப் பாடியருளியதே. சைவசாத்திர நூலான சிவஞான சித்தியாரில் தெளிவாக இந்த நெறிகள் விளக்கப்படுகின்றன. புராணங்கள் பலவும், கடவுள்மாமுனிவர்

3—8—78ஆம் நாள் சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் நடைபெற்ற 'சைவ சித்தாந்தம்' பற்றிய கருத்தரங்கில் பேராசிரியர் ப. இராமன் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவில் ஒரு பகுதி இது.

இயற்றிய திருவாதவூரடிகள் புராணமும் இவற்றை வகுத்துக் கூறுகின்றன. பன்னிரு திருமுறைகளிலும் இந்த நான்கு நெறிகள் பரவிக் கிடக்கின்றன. திருத் தொண்டர் புராணம் இந்த நன்னெறி நான்கினையும் மேற்கொண்டொழுகியவரே அறுபத்துமூவரும் என்பதை விரித்துக் கூறுகிறது.

சரியை – சமய ஆசாரங்களை உபதேசிக்கும். கிரியை—பூஜை ஜபம் ஓமம் முதலியவற்றை உணர்த்தும். யோகம்—பிராணயாமம் முதலிய அங்கங்களோடு கூடிய சிவயோகத்தை அறி விக்கும். ஞானம் –பதி பசு பாச பதார்த்தத் திரயங் களைப் போதிக்கும். விஷயசுகத்தில் பட்டுக் கீழ் நோக்கிப் போகும் தேக இந்திரியாதிகளை ஊர்த்துவ கதியிற் செலுத்திப் பரசுக வாழ்வில் பதிந்திடச் செய்வதே சரியை, கிரியை, யோகம், ஞானங் களின் பண்பாகும். இதனை விரிக்கில், தேகத்தை ஈசுவர விஷயத்தில் செலுத்தல்—சரியை, இந்திரி யங்களைச் செலுத்தல்—கிரியை, பிராண அந்தக் கரணங்களைச் செலுத்தல் - யோகம், ஆன்மா இந்தக் கருவி கரணங்களை எல்லாம் நீக்கித் தனது போதம் சீவியாது ஈசுவரனிடத்தில் அடங்குவது—ஞானம் ஆகும். (சிவதர்மவிசாரம்.)

இந்த நான்கு நெறிகளும் ஏறுபடிகள் (சோபா னம்). இறைவனைப் புறத் தொழில்களால் உருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு முதல் நிலை. இதுவே சரியை நெறி. அகத் தொழிலாலும் புறத் தொழிலாலும் அருவுருவத் திருமேனியை நோக்கிச் செல்வது இரண்டாம் நிலை. இதுவே கிரியை நெறி. அகத் தொழில் மாத்திரையால் அருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் பூசையே யோகம். அருவம் கடந்த நிலையில் இறைவனைக் காண்பதே ஞானம். எங்கும் நீக்கமற நிறைந்துள்ள அகண்டாகார சோதியாக உள்ளேயும் புறத்தேயும் எப்போதும் காண வேண்டும். இந்த நிலை எய்துதலே இறுதிநிலையான நான்காம் நிலை.

இப்படி நிலைகளைத் தாயுமானுர், பராபரக்கண்ணி யில், "விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கும் அரும்பு மலர் காய் கனி என்ருகும் பரா பரமே" என விளக்கியுள்ளார்.

இந்த நான்கு நெறிகளில் அரும்புப் பருவம் போன்றது சரியை. மலர்ப் பருவம் போன்றது கிரியை. காய்ப் பருவம் போன்றது யோகம். கனிப் பருவம் போன்றது ஞானம். ஒரு மரத்தின் அரும்பும், மணமிக்க மலரும், நல்ல காயும், நற்கனியும் ஆகிய நான்கும் விரும்பத் தக்கனவே. அவற் றுள்ளும் கனியே யாவரும் விரும்புவது. ஞானப் பழத்தை விரும்பாதார் ஒருவரும் இலர்.

இனி ஒவ்வொரு நெறியையும் பின்பற்றுவதற்கு ஏற்பப் பயன் உண்டு. சரியை நெறியிற் செல்வோர் சாலோக பதவி அடைவர். கிரியையில் நிற்போர் சாமீப பதவி பெறுவர். யோகத்தில் திளைப்போர் சாரூபம் ஆவர். ஞானத்தை அடைவோர் இறை வனேடு இரண்டறக் கலக்கும் சாயுச்சியம் பெறுவர். முதல் மூன்றும் பதமுத்தியாகும். ஞானத்தால் பெறுவது பரமுத்தியாகும். பதமுத்தி பெறுவோர் மீண்டும் பிறப்பர். பரமுத்தி பெறுவோர் மீண்டும் பிறவார்.

ஒவ்வொரு நெறியாக முறையே காண்போம். புறத்தொழில்களால் உருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு சரியை நெறியாகும். சரியை நெறியைப் பின்பற்றும் அடியான் ஒருவன் இறைவன் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலை அலகிட வேண்டும் (பெருக்கித் தூய்மை செய்தல்', மெழுக்கிட வேண்டும். இறைவனுக்குச் சூட்டுதற்கு உகந்த மலர்கள் பூக்கும் நந்தவனத்தை உண்டாக்குதல் வேண்டும். வில்வம், கோங்கு, பாதிரி, கொன்றை, ஆத்தி, சண்பகம், பன்னீர், செருந்தி, கடம்பு, மகிழ், புன்னை, வெட்சி முதலிய தூய மரங்களை வளர்க்க வேண்டும். இவை கோட்டுப் பூக்கள். இனி, நிலப் பூக்களான நந்தியா வர்த்தம், அலரி ஆகியனவும், கொடிப் பூக்களான மல்லிகை முல்லை ஆகியனவும் வளர்க்க வேண்டும். புனிதமான இந்த மரங்களையும் செடி கொடி களையும் வளர்ப்பதோடு நாள்தோறும் இறைவன் பூசைக்கேற்ற மலர்களைக் காலையும் மாலையும் எடுக்க வேண்டும். இறைவன் பூசைக்கு அரும்பு கள், வாடிய பூக்கள், உதிர்ந்த பூக்கள், சிதைந்த பூக்கள், மோந்து பார்த்தவை, சூடியவை உசித மானவை அல்ல. அன்றலர்ந்த மலர்களே உகந் தவை என்று உணர்ந்து, பறித்து வந்து, தெரிந்த வகையில் பலவேறு மாலைகளாகத் தொடுக்க வேண்டும். இறைவனுக்கு உள்ளம் மகிழ்ச்சியால் மலர மாலைகளைச் சூட்ட வேண்டும். தூய விளக்கிட வேண்டும். பின்பு அவனது பொருள்சேர் புகழைப் பாட வேண்டும். சிவனடியார்களைக் கண்டால் எதிர் சென்று அவர்களை வணங்கி வரவேற்று, அவர்கள் இடும் பணிகளைச் செய்தல் வேண்டும். இவ்வாறு எல்லாப் பணிகளையும் அன்பால் உருகிச் செய்வதே சரியைப் பணி. இதனுல் கிட்டும் பயன் இறை

வனது உலகத்தில் சென்று தங்கும் பேருகும். இதுவே சாலோக முத்தி.

இந்தச் சரியை நெறியைத் தாஸமார்க்கம் என்பர். தாஸமார்க்கமாவது அடிமைத் தொண்டு செய்தல். இந்தத் தொண்டில் தலைநின்றவர் திருநாவுக்கரசர். 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்று இறுதி வரையில் பணி செய்தவர். இவரது சரியைத் தொண்டின் மேன்மையைக் கல்லும் உருகும் வண்ணம் காஞ்சிப் புராணம் கூறுகிறது.

இடையருப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும் உழவா ரத்தின்
படையருத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சும்
நடையருப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன் ஞானப் பாடற்
றொடையருச் செவ்வாயும் சிவவேடப் பொலிவழகும் துதித்து வாழ்வாம்.

இவர் ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்கும் துறவோர். அத்தகு உயர்ந்த மனப்பக்குவ மடைந்தும் சரியைப் பணியையே செய்து பேறு பெற்றார். பெரிய புராணத்தில் சிவனடியார்க்குத் துணி வெளுத்துக் கொடுக்கும் பணியைச் செய்தவர் திருக்குறிப்புத்தொண்டர். திருக்கோயிலுக்கு எண்ணெயிட்டு விளக்கிட்டவர் கலியனார். அடியார்க்குத் திருவோடு அளித்தவர் திருநீலகண்டக் குயவனார். அடியார்க்குக் கோவணம் அளித்தவர் அதிபத்தர். திருக்குளத்தைத் தூர் எடுத்தவர் தண்டியடிகள். இன்னும் பலர் சரியைப் பணியில் தலைநின்றவர்.

தாஸமார்க்கம் சாற்றில் சங்கரன்தன் கோயில்
தலம் அலகிட்டு இலகுதிரு மெழுக்கும் சாத்திப்
போதுகளும் கொய்து பூந்தார் மாலை கண்ணி
புனிதற்குப் பலசமைத்துப் புகழ்ந்து பாடித்
தீதில்திரு விளக்கிட்டுத் திருநந்த வனமும்
செய்துதிரு வேடங்கண்டால் அடியேன் செய்வது
யாதுபணி யீரென்று பணிந்தவர்தம் பணியும்
இயற்றுவதிச் சரியை செய்வோர் ஈசனுல கிருப்பர்.

—சிவஞானசித்தியார்

இந்தப் பாடல் மூலமாகச் சரியை நெறி கூறி முடித்தோம்.

இனிக் கிரியை நெறி காண்போம். அடியான் ஒருவன் அகத் தொழிலாலும் புறத் தொழிலாலும் அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் பூசை கிரியை நெறியாம்.

இறைவன் பூசைக்கு உரிய வாசனைத் திரவியங்களான சந்தனம், பனிநீர், குங்குமப்பூ, கோரோசனை, கத்தூரி முதலியன சேகரித்தல் வேண்டும். அழகிய தூபதீபம், தூய்மையான திருமஞ்சனம், தூய நறுமண மலர்கள், பஞ்சகவ்வியம், இன்னும் பூசைக்கு உரிய உபகரணங்கள் ஆகியவற்றைக் கொண்டு பூசை செய்ய வேண்டும். மாயாகாரியமாகிய காமம் முதலிய தீய குணங்கள் இல்லாதவராக இருத்தல் வேண்டும்.

பூத சுத்தி, தான சுத்தி, திரவிய சுத்தி, இலிங்க சுத்தி, மந்திர சுத்தி என்ற ஐந்து சுத்திகளையும் செய்தல் வேண்டும். முதலில் புறப் பூசையும் பின்பு அகப் பூசையும் செய்தல் வேண்டும். மேற்கூறிய அனைத்துப் பொருள்களாலும் புறப் பூசை இயற்றுவோர் அந்தப் பூசை போன்றே அகப் பூசையிலும் தூய்மை உடையராதல் வேண்டும். அகப் பூசைக்குக் கொல்லாமை, புலால் மறுத்தல், பொறை, புலனடக்கம், தவம், அன்பு, அருள், வாய்மை, அறிவு ஆகிய பண்புகள் தேவை. இவை இல்லாமற் செய்யும் அகப் பூசையால் பயன் வராது.

இந்தக் கிரியை நெறியைச் சற்புத்திர மார்க்கம் என்பர். இந்த மார்க்கத்தைப் பற்றினவர் திருஞான சம்பந்தப் பெருமான். இறைவன் எழுந்தருளியுள்ள தலந்தோறும் சென்று அவன் புகழ் பாடியவர்; அடியார்க்குத் தொண்டு புரிந்தவர். இவர்தம் மெய்யன்பால், இறைவன் பொற்றாளம், முத்துச் சிவிகை, முத்துக் குடை, முத்துப் பந்தர், பொற்காசு என முத்துமுத்தாகவும் பொன்னாகவும் கொடுத்து அருள் செய்துள்ளான். ஆண்பனையைப் பெண் பனை ஆக்கியதும், காவிரி வெள்ளத்தில் படகோட்டி இல்லாமலே ஓடத்தைத் தாமே ஓடச் செய்ததும், அரவம் தீண்டி உயிரிழந்தானைப் பிழைப்பித்ததும், எலும்பைப் பெண்ணாக்கியதும் ஆகிய அற்புதச் செயல்கள் எல்லாம் ஆளுடைய பிள்ளை இயற்றியுள்ளார் எனின் இந்தக் கிரியை நெறியின் சிறப்பை என்னென்பது!

புத்திரமார்க் கம்புகலில் புதியவிரைப் போது
புகையொளிமஞ் சனம்அமுது முதல்கொண் டைந்து
சுத்திசெய்தா சனமூர்த்தி மூர்த்தி மானும்
சோதியையும் பாவித்தா வகித்துச் சுத்த
பத்தியினால் அருச்சித்துப் பரவிப் போற்றிப்
பரிவினொடும் எரியில்வரு காரியமும் பண்ணி
நித்தலுமிக் கிரியையினை இயற்று வோர்கள்
நின்மலன்தன் அருகிருப்பர் நினையுங் காலே

—சிவஞானசித்தியார்

இந்தப் பாடலால், கிரியை செய்வோர் நின்மலன் அருகில் இருக்கும் பேற்றைப் பெறுவர் என அறிகிறோம்.

# அன்னையின் அறிவுரைகள்

அ. லெ. நடராஜன்

அன்னை ஸ்ரீ சாரதாதேவியார் பெண்களுக்கு வழங்கிய சில அறிவுரைகள் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.

பெண்கள் சிலர் அன்னையைத் தரிசிக்க வந்திருந்தனர்; அவர்களுள் சுமங்கலிப் பெண் ஒருத்தி நெற்றியில் குங்குமம் இடாமல் வந்திருந்தாள். இதைக் கவனித்த அன்னை, "மாதே! சுமங்கலிப் பெண்கள் நெற்றியில் திலகம் இட்டுக்கொள்வது அவசியம்" என்று இதமாகக் கடிந்து உரைத்தார்.

பெண்கள் தியானம், ஜபம், வழிபாடு ஆகியவை செய்வது அவசியம் என்று ஸ்ரீஅன்னை வற்புறுத்தினார். அன்னைக்குத் தம்பியர் இருந்தனர் என்பதும், அவர்களுக்குப் புதல்வியர் இருந்தனர் என்பதும் தெரிந்த விஷயம். ஒரு நாள் அன்னையின் தம்பி புதல்வியர் மாலையில் தியானம் செய்வதை விடுத்து, வம்பளந்து வீண்பொழுது போக்கிக்கொண்டிருந்தனர். இதைக் கவனித்த அன்னை, "மாலைப் பொழுதாகிவிட்டது. தியானம் செய்வதை விடுத்து, வம்பளந்து வீண்பொழுது போக்கலாமா? இது முறையா?" என்று சொன்னார். தியானத்தையும் வழிபாட்டையும் ஸ்ரீஅன்னையார் தமது வாழ்நாள் முழுவதும் அதிகம் வலியுறுத்தியுள்ளார்.

பெண்கள் சும்மா இருப்பது கூடாது; ஏதாவது ஒரு வேலையில் ஈடுபட்டு இருக்க வேண்டும் என்பது அன்னை விதித்துள்ள கட்டளை. "பெண்களே! எப்பொழுதும் ஒரு வேலையில் ஈடுபட்டிருப்பது உங்களுக்கு நன்மை பயக்கும். இதனால் உடல், மனம் ஆகிய இரண்டும் ஆரோக்கியம் பெறும்."

இப்படி அன்னை பெண்களுக்கு உபதேசித்திருப்பதனால், ஆடவர்கள் சும்மா இருக்க வேண்டும் என்று யாரும் நினைத்துவிடக் கூடாது.

பெண்களுக்குத் திருமணத்தை விரைவில் முடித்துவிடுவது நலம் என்ற கருத்துத் தொன்றுதொட்டே இந்தியாவில் நிலவி வருகிறது. தக்க கணவனைப் பார்த்துப் புதல்வியருக்குத் திருமணம் முடிப்பதில் தாய்மார் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். கல்வி கற்றுச் சமூகசேவை செய்வது பெண்களுக்கு அதிக நன்மை தரும் என்று ஸ்ரீஅன்னை கருதியுள்ளார். இதைப் பல சமயங்களில் வெளிப்படையாகவும் கூறியுள்ளார்.

அன்னையின் சிடப்பெண் ஒருத்தி அன்னையை அணுகி, "தாயே! எனக்கு ஐந்து புதல்வியர் இருக்கின்றனர். அவர்களுக்கு ஏற்ற கணவன்மாரைக் கண்டுபிடிப்பது பெரிதும் சிரமமாக இருக்கிறது. என்ன செய்வது என்று ஒன்றும் புரியவில்லை" என்று ஏக்கத்துடன் கூறினாள்.



அதற்கு அன்னை, "பெண்ணே! இதற்கு ஏன் கவலைப்படுகிறாய்? தக்க கணவன் கிடைக்கவில்லையானால், அவர்களை நிவேதிதை பள்ளிக்கு அனுப்பி வைத்துவிடு. அங்கு அவர்கள் பயிற்சி பெற்று மகிழ்ச்சியுடன் காலத்தைக் கழிப்பர்" என்று கூறினார்.

உலக இன்பம் நிலையானது அல்ல என்ற உண்மையை ஆண் பெண் இருபாலரும் அறிந்துகொண்டு வாழ்வது அவசியமாகும். திருமண வாழ்விலே இருபாலரும் முழுவதும் தோய்ந்துவிடுதல் கூடாது.

அன்னையின் காலத்தில் நாட்டில் தேசிய இயக்கமும் ஸ்ரீராமகிருஷ்ண இயக்கமும் தீவிரமாகப் பரவி வந்தன. வாலிபர் பலர் மேலான வாழ்வில் ஈடுபாடுகொண்டு, திருமண வாழ்வில் அக்கறை கொள்ளவில்லை. பெண்களைப் பெற்ற தாய்மார்களுக்கு இது பெரும் வேதனையாக இருந்தது. இதுபற்றி ஒரு மாது அன்னையிடம் முறையிட்டுக்கொண்டாள்; "தாயே! இந்தக் காலத்தில் பெண்களுக்குக் கணவன்மார் கிடைப்பது எளிதாக இல்லை. வாலிபர் பலர் திருமண

வாழ்வில் நாட்டம் கொள்ளவில்லை. வயது வந்த பெண்ணை வீட்டில் வைத்துக்கொண்டு என்ன செய்வது?'' என்று கவலையோடு கேட்டாள்.

அதற்கு அன்னை, ''ஆம், உண்மைதான். இந்தக் காலத்தில் பையன்கள் புத்திசாலிகளாகி வருகின்றனர். உலக இன்பம் நிலையானதல்ல என்பதை அவர்கள் படிப்படியாகத் தெரிந்துகொண்டு வருகின்றனர். உலக வாழ்வில் பற்றுக் குறையக் குறைய அந்த அளவுக்கு ஒருவன் மன அமைதியைப் பெறுகிறான்'' என்று பதில் சொன்னார்.

கரும பந்தத்தை விட்டுவிடுவது மூலமே ஒருவன் மேலான கதியைப் பெறலாம் என்ற நம்பிக்கை மக்களிடையே நிலவுகிறது. அதனால் சும்மா இருப்பதே சுகம் என்ற கருத்து உடையவர்களும் உள்ளனர். இந்த நிலையை அறிவித்து, ஒரு மாது அன்னையிடம் விளக்கம் கேட்டபோது அடியில் வரும் பதிலை அன்னை சொன்னார் :—

''ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு வேலையைச் செய்ய வேண்டும். கருமம் செய்வதன் மூலமே கரும பந்தத்தை ஒருவன் விலக்க முடியும்; கருமத்தை விட்டுவிடுவதனால் முடியாது. ஒரு கணங்கூட யாரும் வேலைசெய்யாமல் இருப்பது கூடாது. பின்பே முழுப் பற்றற்ற நிலை ஒருவனுக்கு உண்டாகும்.''

ஒரு சமயம் ஸ்ரீஅன்னையின் தம்பிமகள் மிகுந்த கோபத்துடன் இருந்தாள். இதைக் கவனித்த அன்னை அவளை இதமாகக் கடிந்துகொண்டு, புத்திமதி சொன்னார் :—

''பெண்கள் சீக்கிரமாகக் கோப வயப்படுதல் கூடாது. பொறுமையைக் கடைப்பிடிப்பது மிகமிக அவசியம் ஆகும். சிறுவயதிலும் வாலிபப் பருவத்திலும் பெண்கள் பெற்றோர் பாதுகாப்பில் இருக்க வேண்டும்; இளமையில் தம் கணவருக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். இயல்பாகவே பெண்களுக்கு ரோசம் அதிகம். பிடிக்காத ஒரு சொல்லைக் கேட்க நேர்ந்தால் அவர்கள் மனம் கலங்கிப் போய் விடுகிறது. இந்தக் காலத்தில் சொற்களுக்குப் பஞ்சம் இல்லை. பெண்கள் பொறுமையைக் கடைப்பிடித்து, பெற்றோர் கணவன் ஆகியோருடன் இணங்கி வாழப் பழகிக்கொள்ள வேண்டும்''

அன்னையின் இந்தப் போதனையில் மனுஸ்மிருதியின் சாயல் படிந்திருப்பதை வாசகர்கள் அறியலாம்.

பெண்கள் அடக்க ஒடுக்கமாக வாழ வேண்டும் என்பது ஸ்ரீஅன்னையின் முக்கியமான உபதேசம். ஒரு முறை ஒரு பெண் தன் சேலையை முழங்காலுக்கு மேல் இழுத்து விட்டுக்கொண்டு, பலர் மத்தியில் உட்கார்ந்திருந்தாள். இதைக் கவனித்த அன்னை, ''பெண் ஒருத்தி தன் புடைவையை முழங்காலுக்கு மேலே மடித்து விட்டுக்கொள்வது எதற்கோ?'' என்று கூறிவிட்டு, ''முழங்காலுக்கு மேலே புடைவையை மடித்து விட்டுக்கொள்வது நிர்வாணமாய் இருப்பதற்கு நிகராகும்'' என்ற கருத்துள்ள பாடலையும் எடுத்துக்காட்டி அவளைப் பெரிதும் கடிந்து கொண்டார்.



ஒரு சமயம் அன்னையைக் காண வந்திருந்த துறவிப் பெண்கள் சிலர் ஆன்மிகம் குறித்துப் பலமாகத் தர்க்கம் செய்தனர். ''விக்கிரக ஆராதனை சிறப்புடையதா அல்லவா?'' என்பது குறித்துக் காரசாரமாக விவாதித்தனர்.

இதைச் செவிமடுத்த அன்னை, ''இவ்வாறு விவாதம் புரிவது பெண்களுக்கு அழகன்று; தர்க்கத்தின் மூலம் பிரம்மத்தின் இயல்பை ஞானிகளும் அறிய முடியாது. பிரம்மம் தர்க்கத்திற்கு உரிய பொருள் அன்று'' என்று தெரிவித்தார்.

ஒருசமயம் கணவனும் மனைவியுமாகத் தம்பதியர் அன்னையைத் தரிசித்து அவரிடம் ஆசிபெற வந்திருந்தார்கள். இரவு பதினொரு மணி. அன்னை அவர்கள் இருவரையும் படுக்கையிலிருந்தே ஆசீர்வதித்தார். பிறகு பெண்ணைத் தனியாக அழைத்து, ''பெண்ணே! ஆன்மிக விஷயங்களில் கணவனும் மனைவியும் கருத்து ஒருமித்து நடப்பார்களாயின் ஆன்மிக முன்னேற்றம் வெகு எளிதில் சித்திக்கும்'' என்று புத்திமதி சொன்னார்.

கணவனின் ஆன்மிக முன்னேற்றத்திற்கு மனைவி தடையாக இருப்பது கூடாது; அதேபோல் மனைவியின் ஆன்மிக முன்னேற்றத்திற்குக் கணவன் குறுக்கே நிற்பது கூடாது. இது உண்மை என்பதற்கு ஸ்ரீகுருதேவர்—அன்னை வாழ்க்கை கண்கூடான தக்க சான்றாக மனிதகுலம் முழுமைக்கும் திகழ்கிறது.

ஒவ்வொரு குடும்பத்திலும் நாத்தனார் இருப்பது அவசியம். அதிலும் நல்ல நாத்தனார் இருப்பது மிகமிக அவசியம். ஒரு நாத்தனார் இருந்து அவளும் நல்ல நாத்தனாராக இல்லாது போனால் வாழ்க்கையே சுவையற்றதாகிவிடும் என்பது ஸ்ரீஅன்னை கொண்டிருந்த கருத்தாகும்.

ஒரு முறை ஒரு பெண்மணி தன் நாத்தனாரையும் அழைத்துக்கொண்டு அன்னையைத் தரிசிக்கச் சென்றாள்.

அன்னை அந்தப் பெண்மணியின் நாத்தனாரைப் பார்த்ததும், "இவள் சாந்தமுள்ள நல்ல பெண்ணாக இருக்கிறாள். சமையல் செய்த காய்கறி என்று மட்டும் இருந்து அதுவும் சுவையற்றதாய் இருப்பின், உணவு முழுமையும் கெட்டுவிடும்" என்று சொன்னார்.

நல்ல நாத்தனாராய் இருப்பவள் நல்ல ஊன்றுகோல் போல் வாழ்க்கைக்கு உதவியாக இருப்பாள் என்பது பொருள்.

திருமணம் செய்துகொண்ட கணவனும் மனைவியும் இரண்டொரு குழந்தைகளைப் பெற்ற பின் புலனடக்கத்துடன் வாழ வேண்டும். அப்படியில்லாமல் இருபது இருபத்தைந்து பெற்றுவிட்டுப் பிறகு அவதிப்படக் கூடாது.

பக்தை ஒருத்தி ஒரு நாள், படுத்திருந்த ஸ்ரீஅன்னைக்கு விசிறியால் விசிறிக் கொண்டிருந்தாள். அப்போது அந்தப் பெண்மணியிடம், "குழந்தாய்! இருபத்தைந்து பிள்ளைகளைப் பெற்று எடுத்துவிட்டு, பிறகு கணவனும் மனைவியும் என்னிடம் ஆசிபெற வருகின்றனர். தாங்கள் பெற்ற குழந்தைகளில் பத்துப் பேர் இறந்துவிட்டதாகக் கவலைப்படுகின்றனர்; அழுகின்றனர். இவர்கள் என்ன மனிதப் பிறவிகள்தாமா? இல்லவே இல்லை. இவர்கள் விலங்குகளேயாவர். தன்னடக்கமும் கட்டுப்பாடும் இல்லாத இவர்களை எப்படி மனிதர்கள் என்று கூற முடியும்? 'ஓர் ஆழாக்குப் பாலில் ஐந்து ஆழாக்குத் தண்ணீர் கலந்த பால் போல் இவர்கள் இருக்கிறார்கள். இந்தப் பாலைச் சுத்தப் பாலாகக் காய்ச்சுவது எவ்வளவு கடினமோ அவ்வளவு கடினம் இவர்களை நல்லவர்கள் ஆக்குவதும்' என்று ஸ்ரீகுருதேவர் இத்தகையோரைப் பற்றிக் கூறுவது உண்டு" என்று அன்னை கூறினார்.

ஒரு சமயம் இளம்பெண் ஒருத்தி, தன் நாலைந்து குழந்தைகளை அழைத்துக்கொண்டு அன்னையைத் தரிசிக்க வந்தாள். ஒரு குழந்தை இடுப்பில் இருந்தது; ஒரு குழந்தை கையைப் பற்றிக்கொண்டு வந்தது; மற்றொரு குழந்தை அவளைத் தொடர்ந்து பின்னே வந்தது. அவற்றைச் சமாளிக்க முடியாமல் சிரமப்பட்ட அவள் அன்னையிடம், "தாயே! இவ்வுலக வாழ்க்கை எனக்கு மிகவும் சுவையற்றதாகத் தோன்றுகிறது. கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை" என்று சொன்னாள்.

உடனே அன்னை அவளிடம், "என்ன பெண்ணே, இப்படிக் கூறுகிறாய்? இத்தனை குழந்தைகளைப் பெற்றுள்ள உனக்கு வாழ்வு சுவைக்கவில்லை என்கிறாயே, ஏன்?" என்று கேட்டார்.

அதற்கு அந்த இளம்பெண், "தாயே! இனிக் குழந்தை பெறுவதை நான் விரும்பவே மாட்டேன்" என்று உறுதியோடு சொன்னாள்.

இப்படி அவள் சொன்னதும் முகத்தில் புன்முறுவல் பூத்தவாறே அன்னை, "பெண்ணே! அப்படி நீ நடப்பாயானால் அது உனக்கு நல்லதே" என்று விடையளித்தார்.

சீடப்பெண் ஒருத்தி ஸ்ரீஅன்னையாரை அணுகி, "அம்மா! கணவனைக் குரு போல், அதாவது தெய்வமாக மதித்து ஹிந்துப் பெண்கள் நடக்க வேண்டும் என்று ஹிந்து சமய நூல்கள் கூறுகின்றன. கணவனுக்குச் சேவை செய்வதன் மூலம் மனைவி சொர்க்கப் பேற்றை அடைகிறாள் என்றும், இறைவனுடன் ஐக்கியமடையலாம் என்றும் கூறுகின்றனர். மனைவி ஒருத்தி தன் கணவனின் விருப்பத்திற்குச் சிறிது மாறாகப் பிரார்த்தனை சாதனை இவற்றின் மூலம் புலனடக்கத்துடன் வாழ முயன்றால் அது பாவமாகுமா?" என்று கேட்டாள்.

அதற்கு அன்னை, "பெண்ணே! நிச்சயமாக அது பாவமே ஆகாது. இறைவனது அருளைப் பெற விரும்பிச் செய்யப்படும் எந்தக் காரியமும் பாவம் ஆகாது. தன்னடக்கம் என்பது வாழ்க்கைக்கு அவசியமான ஒன்றாகும். ஹிந்து சமூகத்தில் கைம்பெண்ணுக்கு விதிக்கப்பட்டுள்ள கடினமான கடமைகள் அனைத்தும் தன்னடக்கத்தை நோக்கமாகக் கொண்டு விதிக்கப்பட்டவையாகும். புலனடக்கத்துக்கு உதவும் வகையில்தான் அவை அனைத்தும் அமைந்துள்ளன" என்று பதில் சொன்னார்.

*



# கடவுளைக் காட்டும் பாதைகள்

**ஸ்ரீமத் சுவாமி வீரேச்வரானந்தர்**
தலைவர், ஸ்ரீராமகிருஷ்ண மடம்-சங்கம்

### அறியாமை என்றால் என்ன?

அறியாமை என்பது என்ன? மாறிக்கொண்டே இருக்கும் இந்த உலகம், பொய்யான இந்த உலகம், மெய்யானது நிலையானது என்று நினைக்கிறோமே, அதுதான் அறியாமை! நம்முடைய இந்த உடம்பு, முழுக்க முழுக்க நாற்றமெடுக்கும் அழுக்கால் ஆக்கப்பட்ட இந்த உடம்பு, அழகானது, தூய்மையானது என்று நினைக்கிறோமே, அதுதான் அறியாமை! நம்முடைய சுற்றத்தவர்கள் உண்மையில் (நம் உயிர் பிரியும் காலத்தில்) நமக்குச் சுற்றமாக வராதவர்கள் என்பது நன்றாகத் தெரிந்திருந்தும் அவர்களே எல்லாம் என்று நினைத்து, அவர்களால் துன்பப்படுகிறோமே, அதுதான் அறியாமை!

### ஸ்ரீசங்கரர் கூறுகிறார்

ஸ்ரீசங்கராசாரியார் தம்முடைய வேதாந்த சூத்திரத்தின் விரிவுரையின் துவக்கத்தில் இந்த அறியாமையைப் பற்றிக் கூறியிருக்கிறார். இரண்டே இரண்டு வாக்கியத்தில் மிகவும் துல்லியமாக அவர் கூறியிருக்கும் அந்தக் கருத்தை இதுவரையில் எவ்வளவு பெரிய தத்துவஞானியாலும் மறுக்கமுடியவில்லை; அவர் கூறுகிறார்: "ஆத்மாவும் அநாத்மாவும் (உயிருள்ள பொருளும், உயிரற்ற பொருளும்), சைதன்யமும் ஜடமும் (அறிவுமயமானதும், அறிவற்றதும்) இரண்டும் ஒன்றுக்கொன்று இரவும் பகலும் போன்று முரணானவை. ஆனால் நாம் இந்த இரண்டையும் ஒன்றாகவே நினைத்துக் கொள்ளுகிறோம். அழியாத ஆத்மாவை,* அழிகிற அநாத்மாவான இந்த உடம்போடு இணைத்து, அந்த உடம்பே (ஜடமே) நாம் என்னும் ஆத்மாவாகவும் நினைப்பது நமக்குச் சகஜமாகிவிட்டது" என்று கூறுகிறார். இதனால்தான் நாம் உடம்பைப் பார்த்ததும், 'எங்கும் பரவியிருக்கிற ஆத்மா நாம்' என்று நினைக்காமல், 'இந்தச் சின்னஞ்சிறு உடம்பே நம் ஆத்மா' என்று நினைத்துக்கொள்கிறோம். இந்த நினைப்பில்தான் நம் சிறிய உடம்பு ஒரு மண்டபத்தில் இருந்தால் அந்த உடம்பிற்குள் இருக்கும் உலகம் முழுதும் பரவி நிற்கும் ஆத்மாவும் அந்த மண்டபத்துக்குள் மட்டுமே இருப்பதாக நினைக்கிறோம்.

இப்படியே நமக்கு - இந்த ஆத்மாவிற்கு - வெளியே இருக்கிற வீடு, நிலம், பணம், மனிதர் இவர்களோடு இந்த ஆத்மாவை இணைத்துக் கொண்டு அழியும் அவை எல்லாம் அழியாத ஆத்மாவினுடையவை[1] என்றும், ஆத்மாவைவிட உயர்ந்தவை என்றும் நினைக்கிறோம். இப்படியே உலகிலுள்ள சிலரோடு மட்டும் நம்மைப் பிணைத்துக் கொண்டு, 'அவர்கள் எல்லாரும் நம்மவர்கள்' என்று கூறுகிறோம்.

இப்படியே நம்மை நம் மனதில் தோன்றும் சில மனப்போக்குகளோடு இணைத்துக்கொண்டு, சில நேரங்களில் மகிழ்ச்சியாக இருப்பதாகவும், சில நேரங்களில் வெறுப்போடு இருப்பதாகவும், சில நேரங்களில் வேதனையோடு இருப்பதாகவும் உணருகிறோம்.

### இதனால்தான் துன்பப்படுகிறோம்

நாம் ஏன் துன்பப்படுகிறோம் என்றால், நாம் ஆத்மாவை—எதனோடும் தொடர்பு இல்லாமல், உலகில் நடக்கும் எல்லாக் காரியங்களையும், இந்த உடம்பின் அழிவையும்கூட மூன்றாவது மனிதன் போல் தொலைவிலிருந்து சாட்சி போல் பார்த்துக் கொண்டிருக்கும், எப்போதும் பேரின்பமயமாக இருக்கும், நாம் உணர்கிற உணர்வுகளுக்கு எல்லாம்

---

* "இந்த ஆத்மா ஒருபோதும் பிறப்பதுமில்லை; இறப்பதுமில்லை. இல்லாதிருந்து பிறகு பிறந்ததில்லை. இது பிறவாதது; இறவாதது; தேயாதது; வளராதது. உடல் அழிக்கப்படும்போது ஆத்மா அழிக்கப்படுவதில்லை." கீதை-2.20.

"ஆயுதங்கள் ஆத்மாவை வெட்டுவதில்லை. தீ எரிப்பதில்லை; நீர் நனைப்பதில்லை; காற்றும் உலர்த்துவதில்லை." -2.23.

"ஆத்மா நித்தியமாய், நிறைவாய், நிலையாய் அசைவற்றவனாய் என்றும் இருப்பவன்."-2.24.

"இத்தகைய ஆத்மா அதற்கு நேர் எதிரான-அநாத்மாவான-உடம்போடு சேர்ந்து உடம்பை இயக்குகிறது. மனிதன் தன் அறியாமையால் இயக்குபவனை மறந்து இயங்கும் உடம்பே இயக்குபவன் என நினைக்கிறான்."

அடிப்படையாக இருக்கும் ஆத்மாவை, உலகிலுள்ள ஒவ்வொரு பொருளோடும், நம் மனதில் தோன்றும் ஒவ்வோர் உணர்ச்சியோடும் கட்டிப் பிணைத்துக்கொண்டு, அவற்றில் ஏற்படுகிற விளைவுகளை எல்லாம் ஆத்மாவில் ஏற்படுகிற விளைவுகளாக எண்ணிக்கொள்வதனுல்தான்.

இந்த அறியாமைதான் நாம் துன்பப்படுவதற்குக் காரணம். நாம் இந்த அறியாமையிலிருந்து விடுபட வேண்டும். உலகில் தோன்றிய எல்லாச் சமயங்களும் எல்லா அவதார புருஷர்களும் இந்த அறியாமையிலிருந்து எப்படி விடுபடுவது என்ற வழியைத்தான் கூறிச் சென்றிருக்கிறர்கள். அந்த வழிகள், அமைப்பில் ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டிருந்தாலும், அவை நம்மைக் கொண்டுபோய்ச் சேர்க்கும் இடம் ஒன்றுதான். அது ஆத்மா உலகப் பொருள்களோடு கட்டுப்பட்டது என்ற அறியாமையிலிருந்து நம்மை விடுவிப்பது; நமக்கு ஆன்மிக விடுதலையை அளிப்பது.

### நான்கு பாதைகள்

நாம் இப்போது மற்றெரு விஷயத்திற்கு வருவோம். 'உலகில் இப்போது இருக்கும் பலவேறு சமயங்களின் போதனைகளும் உண்மையில் ஒன்றுக்கு ஒன்று மாருனவையா? ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டுத் தனித்தன்மை வாய்ந்தவையா?' என்று கவனிப்போம்.

எல்லா உலகச் சமயங்களின் உபதேசங்களையும் நாம் ஆராய்ந்து பார்த்தோமானுல் அந்தச் சமயங்களில் கூறப்பட்டுள்ள உபதேசங்கள் அனைத்தையும் நான்கு பெரிய தலைப்புக்களில் அடக்கி விடலாம். இந்த நான்கில் ஒன்று அல்லது இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட பாதைகளை இணைத்தே உலகச் சமயங்கள் யாவும் போதனை செய்துள்ளன. அந்த நான்கு பாதைகள் கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம், ராஜயோகம் என்பவையாகும்.

அவை கர்மயோக வழியையோ, ஞானயோக வழியையோ, பக்தியோக வழியையோ அல்லது தியானயோக வழியையோ அல்லது இந்த வழிகளில் இரண்டை மூன்றை இணைத்தோதான் தங்கள் உபதேசத்தைச் செய்துள்ளன. எல்லாச் சமயங்களின் உபதேசங்களுமே இந்த நான்கில்தான் வந்து நிற்கின்றன. எல்லாச் சமயங்களும் அவை தாங்கள் மேற்கொண்ட சடங்குகளிலும் புராண விளக்கங்களிலும் ஒன்றுக்கொன்று வேறுபட்டாலும், இந்த நான்கு பாதைகளைக் கூறும் நிலையில் ஒன்றுபடுகின்றன. அந்தச் சமயங்களின் போதனைகளை எல்லாம் நாம் சுருக்கினுல் இந்த மிகப் பெரிய நான்கு பாதையான பொது மேடைக்குள் அவை வந்து நிற்பதைக் காணலாம்.

இந்தப் பாதைகள் மூலம், இந்த உடம்பை 'நான்' என்றும், நம் ஆத்மாவிற்குத் தொடர்பில்லாத உலகப் பொருள்களை 'எனது' என்றும் நினைத்துக் கொள்ளும் அகங்காரத்தில், தத்துவநூலில் சொல்லுவதுபோல், ஆத்மாவின் கட்டிலிருந்து, ஜடப் பொருளோடு நம்மை இணைத்துக்கொள்வதிலிருந்து விடுபட வேண்டும். இந்தப் பாதைகளில் ஏதாவது ஒன்றைப் பின்பற்றிக்கூட நாம் அறியாமையிலிருந்து விடுதலை பெறலாம்.

### கர்மயோகத்தின் வழி விடுதலை

கர்மயோகத்தின் மூலம் நாம் 'நான், எனது' என்ற அறியாமைக் கட்டிலிருந்து விடுபட முடியும். எப்படி? கர்மயோகம் என்ருல் பிறருக்கு மனமொன்றித் தொண்டு செய்வதாகும். துன்பத்தில் துடிக்கும் மற்றவர்களின் துன்பத்தைத் தீர்க்க நாம் மனமாரப் பாடுபடுகிருேம். அவ்வாறு பாடுபடும் நேரத்தில் நாம் நம்மைப் பற்றியும் நம் உடம்பைப் பற்றியும் நம் சுகத்தைப் பற்றியும் மறந்து விடுகிருேம். இப்படி அடிக்கடி மற்றவர்களுக்கு உதவி செய்து, அவர்களோடு நம்மை இணைத்துக் கொண்டு, நம்மையும் நம் தனிப்பட்ட சுகங்களையும் மறந்துகொண்டே இருந்தால், நாளடைவில் படிப் படியாக, நம் உடம்பை 'நான்' என்று நினைக்கும் நினைப்பும், நமக்கென்று உள்ள வீடு முதலான பொருள்களை 'எனது' என்று நினைக்கிற நினைப்பும் போய்விடும். இந்த 'நான், எனது' என்னும் அறியாமை போனவுடனே, என்றும் நிலையாய் நித்தியமாய் எல்லாம் நம்முடையதாய், நாமே எல்லாமாய், பேரானந்தமயமாய் உள்ள நம் ஆன்மாவின் - நம் சொந்த இயல்பை - நாம் அடைகிருேம்.

### ஞானயோகம் வழியாக

கர்மயோகம் வழியாக ஆன்மாவின் 'நான், எனது' என்னும் அறியாமைக் கட்டை அறுப்பது போலவே ஞானயோகத்தின் வழியாகவும் அந்தக் கட்டுக்களை அறுத்து ஆன்மாவின் உண்மையான இயல்பை உணரலாம். ஞானம் என்பது ஆன்மாவைப் பற்றிய அறிவு. இதன் மூலம் ஒருவன் இந்த உலகப் பொருள்கள் அனைத்தையும், 'இது நிலையானதா? இது நிலையான ஆத்மாவா?' என்று ஆராய்ச்சி செய்யலாம். அதனுல் இந்த ஞானயோகத்தை 'நேதி வழி' (இது அல்ல, இது அல்ல என்று உலகப்

பொருள்களை எல்லாம் ஒதுக்கிக்கொண்டு போய் இறுதியில் ஆன்மாவை இதுதான் என்று அடையும் வழி) என்று கூறுவார்கள்.

இந்த வழியின் மூலம் நாம் நம் உடல், மனம், உணர்வுகள் முதலியவற்றை, மொத்தமாக ஆன்மாவுக்கு எதிரான எல்லாவற்றையும் 'இது அல்ல, இது அல்ல' என்று ஒதுக்கிவிட்டு, இறுதியில் நம்முடைய உயிருக்கு எது ஆதாரமாக இருக்கிறதோ அந்த ஆத்மாவை அடையலாம். இவ்வாறு ஞானயோகத்தின் மூலம் நம் ஆன்மாவை அடைந்து, இறப்பு, பிறப்பு, நோய் என்ற நம்முடைய துன்பங்களைக் கடக்கலாம்.

### பக்தியோகத்தின் வழியாக

அடுத்து, பக்தியோகத்தை எடுத்துக் கொள்வோம். இந்த யோகத்தை நாம் மேற்கொள்வதனால் கடவுள் மீது நாம் பேரன்பு கொள்கிறோம். கடவுளுக்காகவே எல்லாக் காரியங்களும் செய்கிறோம். கடவுளிடம் பிரார்த்தனை செய்கிறோம். கடவுளுக்காகக் கோயில் கட்டுகிறோம். கடவுளுக்காக உணவு சமைக்கிறோம். அவருக்கு நைவேத்தியம் செய்கிறோம். அவருக்காகவே இப்படிப் பல காரியங்களைச் செய்கிறோம். இப்படிக் கடவுளுக்குப் பணி செய்யும் காரியங்களில் கொஞ்சம் கொஞ்சமாக நம்மை மூழ்கடித்துக்கொண்டு 'நான், எனது' என்ற உணர்வுகளை அழித்துவிடுகிறோம். ஆத்மமயமாகி அழியாத பேரின்பத்தில் திளைக்கிறோம்.

### ராஜயோகத்தின் வழியில்

இதன் பிறகு ராஜயோகம் அல்லது தியானம் வருகிறது. இந்த யோகத்தின்மூலம் நாம் மனதில் எந்த நேரமும் கிளர்ந்து எழுந்துகொண்டே இருக்கும் எண்ணப் புகைச்சலிலிருந்து விடுபடுகிறோம். யோகம் என்று சொன்னால் ஒருமுகப்படுத்துதல் என்பது பொருள். நாம் நம் மனதில், மன அமைதியைக் குலைக்கும் எந்த ஆசைகளையும் நினைவுகளையும் எழும்படி விடக் கூடாது. நம் மனதை முற்றிலும் அமைதிமயமாக ஆக்கித் தூய்மைப்படுத்த வேண்டும். மனம் ஆழ்ந்த அமைதியாகவும் தூய்மையாகவும் இருக்கும்போது நாம் அதில் ஆத்மாவைக் காண முடியும்.

குளத்தில் குமிழ்கள் சிறிதுகூட இல்லாமல் தண்ணீர் தூயதாகவும் கலங்கல் இல்லாமலும் இருக்கும்போது அதனுடைய அடிப்பாகத்தை நம்மால் பார்க்க முடியும். ஆனால் நீரில் குமிழ்களோ கலங்கலோ இருந்தால் நம்மால் குளத்தின் அடிப் பகுதியைக் காண முடியாது. அதுபோல நம் மனம் அழுக்கடைந்தோ, நினைவுக் குமிழ்களின் கூட்டம் அதன் மேற்பரப்பில் எந்த நேரமும் தோன்றிக் கொண்டோ இருந்தால் நாம் அந்த மனதின் அடியில் இருக்கும் ஆத்மாவைக் காண முடியாது.

இப்படி இந்த நான்கு பாதைகளில் ஏதாவது ஒரு பாதையின் வழியாக நாம் நம் ஆன்மாவின் சுய நிலையை—சத்-சித்-ஆனந்த நிலையை அறியலாம்.

### மக்கள் மனநிலை

ஆனால் பொதுவாக மக்களின் மனநிலை இந்த நான்கு பாதைகளில் ஏதாவது ஒன்றை மட்டுமே பின்பற்றி ஆத்மாவை உணரும் நிலையில் இல்லை. அவர்களுடைய மன இயல்புக்கு ஒன்றுக்கு மேற்பட்ட, ஒன்றோடு ஒன்று கலந்த பல யோகங்களின் கலப்புத் தேவைப்படுகிறது.

ஸ்ரீராமகிருஷ்ணர் 'குறைந்தபட்சம் மூன்று யோகங்களையாவது இணைத்து ஒவ்வொருவரும் சாதனை செய்ய வேண்டும்' என்று கூறுவது வழக்கம். ஒரு பறவைக்கு இரண்டு சிறகுகளும் ஒரு வாலும் இருந்தால்தான் பறக்க முடியும். அவை இல்லாமற் போனால் அதனால் பறக்க முடியாது. அது போலவே மனித ஆத்மாவிற்கும் குறைந்தது மூன்று யோகங்களாவது இல்லை என்றால், அது கடவுளை உணர்தல் என்ற உயர்ந்த நிலைக்குப் பறந்து செல்ல முடியாது. இது ஒவ்வொருவனிடமும் அமைந்திருக்கிற பொதுவான இயல்பு-மன அமைப்பு ஆகும்.

இந்த நான்கு யோகங்களில் ஒவ்வொரு யோகமும் தனித்தனியாகவே ஒருவனைக் கடவுளை உணரும் உயர்ந்த நிலைக்கு எடுத்துச் செல்லும் ஆற்றலைப் பெற்றது. என்றாலும் மனிதனின் மன அமைப்பு இவற்றில் எவையேனும் மூன்று யோகங்களை ஒன்றோடு ஒன்று இணைத்துக்கொண்டால்தான் எளிதாகக் கடவுளை உணரும் ஆற்றலை அடைகிறது. இந்த மூன்று யோகங்களில் ஏதாவது ஒன்றில் ஒருவருடைய மனம் ஆழ்ந்த பற்றுக் கொண்டால், அந்த யோகம் அவருடைய பாதை (மார்க்கம்) என்று சொல்லப்படுகிறது. உதாரணமாக, ஒருவருடைய மனம் கர்மயோகத்தையும் ஞானயோகத்தையும்விடப் பக்தியோகத்தில் சற்று ஆழ்ந்த விருப்பம் கொண்டால் அவருடையது பக்தி மார்க்கம் என்று கூறப்படுகிறது. மற்ற யோகங்களை விட ஒருவருக்கு அறிவுமயமான ஞானமார்க்கத்தில் ஆழ்ந்த பற்று இருந்தால் அவருடையது ஞான மார்க்கம் என்று கூறப்படுகிறது. இப்படியே மற்ற மார்க்கங்களும் சொல்லப்படுகின்றன. [தொடரும்]

அருள்நெறிக் கதை :

# வாய்மையே வெல்லும்

**விவேகானந்ததாசன்**

உண்மையின் சிறப்பை விளக்கும் இந்தக் கதை பத்மபுராணத்தில் இடம் பெற்றுள்ளது.

ஒரு சமயம் பிரபஞ்சனன் என்னும் அரசன் சரஸ்வதி நதிக்கரையிலிருந்த நாட்டை ஆட்சி செய்து வந்தான். ஒரு நாள் அவன் வேட்டையாடுவதற்காகக் காட்டுக்குச் சென்றான். அப்போது அவன் பார்வையில் ஒரு பெண்மான் தன் குட்டிக்குப் பால் கொடுத்துக்கொண்டிருக்கும் காட்சி தட்டுப் பட்டது. பிரபஞ்சனன் அந்த மானின் மீது அம்பை எய்தான். மான், "அம்பு எய்த அரசன் புலியாக மாறக் கடவது" என்று சாபம் தந்தது. அதன் சாபம் உடனே பலித்தது.



புலியாக மாறிய அரசன் தன் குற்றத்தை மறந்து மன்னிக்கும்படி மானிடம் வேண்டினான். "நீ நூறு வருடம் புலியாக இருந்து சாபத்தை அனுபவிப்பாய். பிறகு நந்தா என்னும் பசுவின் மூலம் உனக்குச் சாப விமோசனம் ஏற்படும்" என்று சொல்லி, மான் உயிர் நீத்தது.

அதோடு புலியாக மாறிய பிரபஞ்சனனுக்குத் தன் பழைய வரலாறு மறந்துவிட்டது. புலியின் குணங்களுடனும் சிந்தனைகளுடனும் அவன் வாழ்ந்தான். மற்றப் பிராணிகளைக் கொன்று பசியைப் போக்கிக் கொண்டான். பல வருடங்கள் உருண்டோடின.

ஒரு சமயம் அந்தப் புலி வாழ்ந்து வந்த காட்டுக்குப் பசுக்கள் மேய வந்தன. காட்டில் நாள் முழுவதும் மேய்ந்த பசுக்கள் அன்று மாலை ஊர் திரும்ப ஆரம்பித்தன. அவற்றுள் நந்தா என்ற பசு மட்டும் சற்றுப் பின்தங்கிவிட்டது. அதே சமயம் மழை வேறு பெய்ய ஆரம்பித்ததனால் ஏனைய பசுக்கள் நந்தா பின்தங்கியதை உணராமலேயே சென்று விட்டன. மழைக்கு ஒரு மரத்தடியில் ஒதுங்கியிருந்த நந்தா தன் நிலையைப் புரிந்து கொண்டதும் வேக வேகமாக ஊரை நோக்கி ஓட ஆரம்பித்தது.

அப்போது பிரபஞ்சனன் ஆகிய புலி தன் குட்டிகளுக்கு இரை தேடி வந்துகொண்டிருந்தது. அது நந்தாவைக் கண்டதும் நல்ல இரையாகக் கிடைத்திருக்கிறது என்ற எண்ணத்துடன் பசுவை வழி மறித்து நிறுத்தியது. நந்தாவின் மீது புலி பாய்வதற்குத் தயாராயிற்று. நந்தா தன் உயிர் போவதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை.

ஆனால் கோகுலத்தில் தன் வருகையை ஆவலுடன் எதிர்நோக்கியிருக்கும் தன் கன்றை நினைத்த போது அதன் உள்ளம் படாதபாடுபட்டது. தன்னைக் கொல்ல எத்தனித்த புலியிடம், "ஐயா, என் கன்று இப்போது கோகுலத்தில் பசியால் வருந்திக் கொண்டு இருக்கும். அதற்குப் பால் கொடுப்பதற்காகவே நான் இவ்வளவு வேகமாகக் கால்தெறிக்க ஓடி வந்தேன். நான் சென்று என் கன்றுக்குப் பால் கொடுத்துவிட்டு அதை என் மற்றத் தோழிகளாகிய பசுக்களிடம் ஒப்படைத்தவுடனே இங்கே மீண்டும் வருகிறேன். பிறகு தாங்கள் என்னைத் தங்கள் விருப்பப்படியே இரையாக்கிக் கொள்ளுங்கள். என் கன்றுக்குப் புத்திமதி கூறவும் அதைக் கடைசியாகப் பார்க்கவும் ஆவல் கொள்கிறேன். இப்போது என் மீது தாங்கள் கிருபை வைத்து நான் என் கன்றைப்

பார்த்து வர அனுமதிக்க வேண்டும்'' என்று வேண்டியது.

நந்தா சொன்னதைப் புலி கேட்கத் தயாராக இல்லை. ''உன்னை நான் இப்போது போக அனுமதித்தால் நீ திரும்பி வருவாய் என்பது என்ன நிச்சயம்? இன்றைய தினம் நீ எனக்கு இரையாக வேண்டும் என்று தெய்வம் விதித்திருக்கிறது. உன்னை நான் இப்போது கொல்லத்தான் போகிறேன்'' என்றது.

நந்தா புலியிடம், ''நான் என் வார்த்தையைக் காப்பவள். என்னை நம்புங்கள்'' என்று சொல்லி, தான் சொன்ன சொல் தவறினுல் இன்ன இன்ன பாவங்களுக்கு உட்படத் தயாராக இருப்பதாகப் பல பாவச் செயல்களைக் கூறிச் சபதம் செய்தது.

பொதுவாக மனிதர்களின் நிலையே வேறு. புலியாக இருந்ததனுல் போலும், நந்தா சொன்னதைக் கேட்ட பிரபஞ்சனனின் மனம் இளகியது. ''சரி, நீ சொல்வதை நம்புகிறேன். ஆனுல் உடனடியாக நீ உன் கன்றைப் பார்த்துவிட்டுத் திரும்ப வேண்டும். அதோடு ஒரு விஷயத்தையும் ஞாபகம் வைத்துக் கொள்: உயிர் தப்புவதற்குப் பொய் சொல்லலாம் என்று கூறிப் பலர் உன் மனதை மாற்ற முயலுவார்கள். அதைக் கேட்டு நீ ஏமாந்து போகாமல், வாக்குக் கொடுத்தபடி இங்கே வர வேண்டும்'' என்று புலி சொன்னது.

''நான் உன்னை ஒருநாளும் மோசம் செய்ய மாட்டேன். பிறரை வஞ்சிப்பவன் தன்னையே வஞ்சிப்பவன் ஆகிருன்.''* என்று நந்தா பதில் சொல்லி விட்டுப் புலியின் அனுமதியுடன் தன் இருப்பிடம் நோக்கி நாலுகால் பாய்ச்சலில் விரைந்தது.

கோகுலத்தில் நந்தாவைக் காணுததனுல் கன்று தவித்துக் கொண்டிருந்தது. தாயைக் கண்டதும் மகிழ்ச்சியுடன் அதனுடன் துள்ளிக் குதித்து விளையாடியது. பால் குடிக்க ஆரம்பித்தது. ஆனுல் வழக்கப்படி தன்னை அன்புடன் நாவால் வருடும் தாய் அன்று சோகமயமாக இருப்பதைக் கண்டு கன்று திடுக்கிட்டது. ''ஏனம்மா வருத்தமாக இருக்கிருய்? என்ன காரணம் என்று எனக்குச் சொல்லக் கூடாதா?'' என்று நந்தாவிடம் கேட்டது.

நந்தா காரணத்தை விளக்கியது. அதைக் கேட்டதும் கன்று அலறியது. ''அம்மா! நானும் உன்னுடன் வந்து அந்தப் புலிக்கே இரையாகிவிடுகிறேன்' என்று தெரிவித்தது. நந்தா மனம் நெகிழ அன்புடன், தான் இல்லாத நிலையில் கன்று தன்னைத்தானே எப்படிக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்,* எப்படி வாழ வேண்டும், மற்றவர்களுடன் எப்படிப் பழக வேண்டும் என்பதை எடுத்துச் சொல்லிக் கன்றின் மனம் ஆறுதல் பெறும் வகையில் தேற்றியது.

பிறகு நந்தா கன்றைத் தன் தாயிடமும், தோழிகளாகிய பசுக்களிடமும் அழைத்துச் சென்றது. அவர்களிடம் கன்றை ஒப்படைத்து, தான் காட்டுக்குச் செல்ல வேண்டிய நிலையில் இருப்பதை விளக்கியது. புலி நினைத்தபடியே நந்தாவின் தாயும் ஏனைய தோழிகளும்,

உக்த்வாந்ருதம் பவேத் யத்ர ப்ராணிநாம் ப்ராண-
ரக்ஷணம் |
அந்ருதம் தத்ர ஸத்யம் ஸ்யாத் ஸத்யமப்யந்ருதம்
பவேத் ||

''பொய் சொல்லி உயிரைக் காப்பாற்றினுல் அது உண்மையே ஆகும். உயிருக்கு அழிவை உண்டு பண்ணும் உண்மையும் பொய்யேயாகும்'' என்று உலகில் வழங்கும் பல நியாயங்களை நந்தாவுக்கு எடுத்துக் கூறின. ''புலிக்கு நீ கொடுத்த வாக்குறுதியைப் புறக்கணித்துவிடு'' என்று நந்தாவின் மீதும் அதன் கன்றின் மீதும் கொண்ட அன்பு காரணமாகவே அவை மன்ருடிக் கேட்டுக்கொண்டன.

ஆனுல் தன் தாயும் தோழிகளும் எடுத்துக் கூறிய காரண காரியங்களையும் நியாயங்களையும் நந்தா ஏற்றுக்கொள்ளவில்லை. அது தன் தாயையும் மற்றப் பசுக்களையும் பார்த்துக் கூறியது: ''மற்றவர்களைக் காப்பாற்றுவதற்காக வேண்டுமானுல் பொய் சொல்லலாம். என் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக நான் பொய் சொல்ல மாட்டேன். அவனவன் செய்த புண்ணிய பாவங்களை அவனவன் அனுபவித்துத் தீர்க்க வேண்டும். சொர்க்கம் மோட்சம் தர்மம் ஆகியவை எல்லாமே நாம் பேசும் பேச்சைத் தான் பொறுத்திருக்கின்றன. ஆகையால் எவன் உண்மை பேசுவதை விட்டுவிடுகிருனே அவன் மங்களகரமான எல்லா நன்மைகளையும் இழந்துவிடு

* ஆத்மைவ வஞ்சிதஸ் தேந ய: பரம் வஞ்சயிஷ்யதி.
—பத்ம புராணம்

* தன்னைத் தன்னுலே உயர்த்திக் கொள்க. தன்னை இழிவுறுத்தலாகாது. ஏனென்ருல் தானே தனக்கு நண்பன்; தானே தனக்குப் பகை.
—கீதை, 6, 5

கிறன். மனதில் ஒன்றை வைத்துக் கொண்டு வெளியே வேறு விதமாகப் பேசுபவன் தன் ஆத்மா வையே அபகரிக்கும் திருடன் ஆகிறன்.''

நந்தாவின் உறுதியை எவராலும் கலக்க இயல வில்லை. பிறகு அது அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு புலியை அடைந்தது. நந்தா புலியிடம், ''என் கடமைகளை முடித்துவிட்டேன். இனித் தாங்கள் என்னை இரையாக்கிக் கொள்ளலாம்'' என்றது. அதே சமயம் கன்றும் வெகு வேகமாக அந்த இடத்திற்கு ஓடோடி வந்து சேர்ந்தது. அது தன் தாயின் முன்னல் நின்றபடி, ''என் தாயைக் கொல்வதுடன் என்னையும் கொன்று உங்கள் பசியைத் தீர்த்துக் கொள்ளுங்கள்'' என்று புலியை நோக்கிக் கூறியது. நந்தாவினல் செம்மையாக வளர்க்கப்பட்ட கன்று தன் தாயின் குணநலன் களையே பெற்றிருந்தது. தாயைப் போலப் பிள்ளை; நூலைப் போலச் சேலை.

புலிக்குத் தன் குட்டிகளின் நினைவு வந்தது. அது வும் ஒரு தாயே அல்லவா? 'நான் இறந்துவிட்டால் என் குட்டிகள் எப்படியெல்லாம் பாடுபடும்? அதே போலத்தானே இந்தப் பசுவும் இறந்துவிட்டால் அதன் கன்றும் துன்பப்படும்!' என்ற சிந்தனை எழுந்தபோது புலியின் மனம் நெகிழ்ந்தது. அதோடு தன் கன்றையும் சுற்றத்தார்களையும் சத்தியத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் இழக்க வும் முன்வந்த பசுவின் நேர்மை புலியின் மனதை மாற்றிவிட்டது. அது நந்தாவிடம், ''உன்னைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணத்தை மாற்றிக் கொண்டுவிட்டேன். வாய்மை என்னும் உன் பெருங்குணம் என்னை வென்றுவிட்டது. உன் சத் தியமே இப்போது உன்னைக் காப்பாற்றி விட்டது. இது முதற்கொண்டு பிறரைக் கொன்று வாழும் வாழ்க்கையே எனக்கு வேண்டாம். அப்படிப்பட்ட வாழ்வை நான் வெறுக்கிறேன். நீ எனக்கு நன்மையைத் தரக்கூடிய உபதேசங்களைச் செய்ய வேண்டும்'' என்று பிரார்த்தித்தது.

புலிக்கு நந்தா மனிதகுலம் முழுவதுமே ஏற்றுப் பின்பற்றத் தக்க ஓர் உபதேசத்தை அருளியது: ''எல்லா உயிர்களுக்கும் எவன் அபயம் அளிக் கிருனே அவன் பிரம்மத்தை அடைகிருன்'' என்று நந்தா சொல்லி முடித்தது.

பசு சொல்லி முடித்தபோது அதன் பெயர் நந்தா என்பதைப் புலி அறிய வந்தது. அது நந்தாவைத் தொட்டு வணங்கியது. அதே வினடியில் புலிவடி வில் வாழ்ந்து வந்த பிரபஞ்சனன் சாபம் நீங்கித் தன் பழைய அரச வடிவைப் பெற்ருன். அப்போது தர்மதேவதையும் அங்கே தோன்றியது. தர்மதேவ தையின் திருவருளால் நந்தாவுக்குப் பரம்பொருளு டன் இரண்டறக் கலக்கும் மோட்சநிலை கிடைத்தது. எல்லாத் தளைகளினின்றும், பிறப்பு இறப்புத் துன்பங் களினின்றும், அடிமைத்தனம், தகிடுதத்தங்கள் ஆகியவற்றினின்றும் விடுபட்டதான, பொய்மை யின் சாயலும் படியாத, நித்தியப் பேரின்பநிலையாகிய பிரம்மத்துடன் நந்தா ஐக்கியம் ஆயிற்று.

பிரபஞ்சனன் மீண்டும் தனது பட்டணம் திரும்பி முன்பு போலவே ஆட்சியை மேற்கொண்டான்.

சத்தியம் என்ற உயர்ந்த பண்பையே உயிர்நாடி யாகக் கொண்ட நந்தாவின் பெயர் உலகில் நிலைத் திருக்க வேண்டாமா? நந்தா முக்தி அடைந்த நாள் முதல் மக்கள் சரஸ்வதி நதியை நந்தா சரஸ்வதி நதி என்று அழைக்க ஆரம்பித்தார்கள். *

---



பிறருக்காக உழையுங்கள். பிறர் உழைப்பை எதிர்பார்க்காதீர்கள்.
—ஓர் அறிஞர்

பிறர் துன்பம் கண்டு இரங்குதல் மனிதகுணம். பிறர் துன்பத்தை நீக்குதல் தெய்வகுணம்.
ஹோரெஸ்மான்

பாலில் சேர்ந்த நீரைத் தீ சுடுவதனல் பால் கோபத்தால் பொங்கித் தீயின்மேல் பாய்வது போல, மேலோர் தமது உயிரைக் கொடுத்தாகிலும் பிறர் துன்பத்தை நீக்குவர்.
—நீதிவெண்பா

புலியின் நகமும், கவரிமானின் ரோமமும், யானையின் ஒளிமிக்க தந்த மும் தம் இடத்தை விட்டு மாறினலுங்கூடச் சிறப்பையே அடைகின்றன. மெய்யறிவு பெற்ற மேலோர் தமது நிலையால் வேறுபட்டாலும் சிறப்பே அடைவர்.
—நீதிவெண்பா

# நிலாச் சூடும் காரணம்

**வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன்**



சிவபெருமானுடைய திருக்கோலமும் அவன் அணிந்துள்ள பொருள்களும் அவன் செயல்களும் விசித்திரமானவை. மற்ற மூர்த்திகளின் போக்கு வேறு, அவனுடைய போக்கு வேறு. எல்லோரும் பட்டும் பீதாம்பரமும் உடுத்திருப்ப அவன் புலித் தோலையும் யானைத் தோலையும் புனைந்திருக்கிறான். எல்லோரும் மணமும் அழகும் உள்ள மலர்களை அணிந்திருக்க அவன் எருக்கும் தும்பையும் கொன்றையும் அணிகிறான். பிறர் மணியாலும் பொன்னாலும் அமைந்த அணிகளை அணிய அவன் எலும்பையும் பாம்பையும் ஆபரணங்களாகக் கொண்டுள்ளான். யாவரும் சந்தனம் பூச அவன் சுடுநீறு பூசியுள்ளான். எல்லோருடைய கண்களும் உரிய இடங்களில் இருக்க அவனுக்கு மூன்றாவது கண் ஒன்று நெற்றியிலே குறுக்காக இருக்கிறது. "கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை" என்று மாணிக்கவாசகர் பாடுகிறார்.

அவன் ஊரூராகச் சென்று பிச்சை எடுத்து உண்ணுகிறான். பிச்சைப் பாத்திரமாவது நன்றாக இருக்கிறதா? வெண்தலை என்று சொல்லும் கபாலத்தில் பிச்சை வாங்கி உண்கிறான். இப்படி இருக்கிறவனை மற்றவர்கள் கண்டால் இழிவாகப் பேச மாட்டார்களா? ஒருகால் அவனுக்குப் பயந்துகொண்டு அவன் முகத்துக்கு எதிரே இழிவாகப் பேசாவிட்டாலும், அவன் போனபிறகு இழித்து எள்ளி நகையாடுவார்கள்; புறம் பேசுவார்கள்.

எம்பெருமான் ஏன் இப்படிச் செய்கிறான்? இப்படிப் புலால் நாற்றம் வீசும் கபாலத்தில் பிச்சை வாங்கி உண்பது அவனுக்குப் பெரிய வடுவல்லவா? பிச்சை எடுப்பதே முதலில் அவமானம். அதுவும் கபாலத்தைப் பிட்சாபாத்திரமாகக் கொண்டது அதை விட அவமானம். அந்தக் கபாலமாவது சுத்தமாக இருக்கிறதா? இன்னும் புலால் நாற்றம் வீசுகிறது. அதில் பிச்சையெடுப்பது மிகமிக வடுவான செயல். சைவ உணவு என்றாலே ஊன் இல்லாத உணவைக் குறிக்கும். அப்படியிருக்கச் சிவபெருமானே ஊன் நாற்றம் வீசும் பாத்திரத்தில் பிச்சை வாங்குவது எவ்வளவு இழிவு? கலம் தூய்மையாக இல்லாவிட்டால் அதில் இடும் உணவும் தூய்மையில்லாமல் போகுமே!

சிவபெருமான் கபாலியாகத் திரிந்து பிச்சையெடுத்துண்பதைப் பலரும் பழிப்பது அவனுக்குத் தெரியாதா? அவன் அவ்வாறு செய்வதை வடு என்று கருதவில்லையா?

இப்படியெல்லாம் காரைக்காலம்மையார் யோசித்துப் பார்க்கிறார். அவரே யோசிக்கும்போது நமக்கு அந்த யோசனை எழாதா? இறைவன் பிரமனுடைய கபாலத்தில் பிச்சை ஏற்கிறான். பிரமனுக்கு முன்பு ஐந்து தலைகள் இருந்தன. சிவபெருமானுக்கும் ஐந்து சிரங்கள். பிரமன், 'எனக்கும் ஐந்து தலை; சிவனுக்கும் ஐந்து தலை; இருவரும் சமானம்' என்று தருக்குக் கொண்டான். பெரிய உத்தியோகம் வகிக்கிறவர்கள் நல்ல பண்போடு இருந்தால்தான் அவர்கள் வேலை நன்றாக நடக்கும். தமக்கு மேலதிகாரிகள் இருக்கிறார்கள் என்ற எண்ணம் இன்றித் தான்தோன்றித் தம்பிரான்களாக இருந்தால் அவர்களால் நன்மை உண்டாகாது. அவர்களால் மற்றவர்களுக்குத் தீங்கு உண்டாவது மாத்திரம் அன்று; அவர்களுக்கே தண்டனை கிடைக்கும்.

படைப்புத் தொழில் என்பது மிகவும் கௌரவமான செயல்; பொறுப்பு மிக்க தொழில். அதைப் புரிபவர்கள் ஒழுங்காகச் செய்ய வேண்டும். தமக்கு மேல் தலைவர்கள் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, பணிவாக வேலையைச் செய்து வர வேண்டும். அப்படியின்றிக் கர்வம் உண்டாகி விட்டால் முறைபிறழ்ந்து நடக்கும்படி ஆகிவிடும்.

பிரமன் கர்வம் கொண்டான். மேலதிகாரியை மதிக்காத தருக்கு அவனிடம் உண்டாயிற்று. அப்

போது இறைவன் அவனுக்குத் தண்டனை கொடுத்தான். ஐந்தாவது தலையைக் கிள்ளிப் பிரமனை நான்முகனாக்கினான். அப்படிக் கிள்ளிய தலையின் கபாலத்தையே பிட்சாபாத்திரமாக ஆக்கிக்கொண்டான். ஊனெல்லாம் கரைந்து வெள்ளை வெளேரென்று இருக்கும் மண்டையோடு அது. துறவிகள் பிட்சை வாங்க மண்ஒடு வைத்திருப்பார்கள். அதுபோலச் சிவபெருமான் மண்டையோடு வைத்திருக்கிறான். அதைத்தான் கபாலம் என்றும் வெண்டலை என்றும் சொல்வார்கள்.

சிவபிரான் பிரமனிடமிருந்து பட்டுப் போன தலையில் பிச்சை எடுக்கிறான்; "படுவெண் தலையினுள் ஊண்" ஏற்கிறான். அப்படிச் செய்வது எதற்காக?

ஆணவத்தின் பகுதிதான் கர்வம். அதை உடையவர்கள் துன்பம் அடைவார்கள் என்பதைக் காட்டவே அதைக் கையில் வைத்திருக்கிறான். கர்வம் அடைந்தவர்கள் எவ்வளவு பெரியவர்களானாலும் அவர்களுக்கு நிச்சயமாகத் தண்டனை உண்டு.

அது மட்டும் அல்ல, அவன் அந்தக் கபாலத்தை ஏந்திக்கொண்டு ஊர்தோறும் பிச்சைக்குப் போகிறான். உலகம் முழுவதும் திரிகிறான். "நீ உலகம் எல்லாம் இரப்பினும்" என்று அடுத்தபடி சொல்லப் போகிறார் அம்மையார்.

அவ்வாறு அவன் கபாலத்தை ஏந்திக்கொண்டு போகும்போது அவன் பெருமையை உணராதவர்கள் பழிகூறுவார்கள். அதைப்பற்றி அவன் கவலைப்படுவதில்லை. அன்பர்களோ உண்மையை உணர்ந்து உருகுவார்கள். அவன் பிச்சை வாங்குவதாகப் பேர் பண்ணிக்கொண்டு அன்பர்களுக்கு அருட்பிச்சையளிக்கப் போகிறான். 'என்னை நம்பினவர்களுக்குப் பிறப்பு இல்லை' என்பதை அந்தக் கபாலத்தால் உணர்த்துகிறான். பிரமன் எல்லோருடைய மண்டையோட்டிலும் எழுதுகிறான் என்று சொல்வது ஒரு வழக்கு. அதனால் விதியைத் தலையெழுத்து என்று சொல்லும் வழக்கம் உண்டாயிற்று. எல்லோருடைய கபாலத்திலும் எழுதும் பிரம்மாவின் கபாலத்தையே தலைகீழாக்கி ஏந்துகிறான் இறைவன். 'உங்கள் தலையில் எழுதுகிறவன் கபாலமே என் கையில் இருக்கிறது. அதையே நான் நிமிர்த்தி வைத்திருக்கிறேன். என்னை வழிபட்டவர்களுக்குப் பிரமனால் தீங்கு வராது. அவன் அவர்களைப் பிறக்கச் செய்ய மாட்டான். அவர்கள் தலையில் எழுத வேண்டிய நிலை அவனுக்கு இராது' என்பதையே கபாலியாக இருந்து காட்டுகிறான் இறைவன்.

அவனுக்குத் தாருகாவனத்து மகளிர் பிச்சையிட்டார்கள். அந்தக் கபாலத்தினுள்ளே ஊணை வாங்கினான். ஆனால் அந்த ஊணை அவன் உண்கிறானா? அப்படி உண்டதாக யாரும் சொல்லவில்லை. தேவர்கள் அமுதை உண்ணும்படி அநுக்கிரகம் செய்த அவன் அதில் ஒரு துளியை உண்ணவில்லை. அவர்கள் பிழைப்பதற்காக ஆலால விடத்தை உண்டான்; அதையும் உண்டான் என்று சொல்ல முடியாது. அது வயிற்றுக்குள் போகவில்லை. அதைத் தன் கழுத்திலே நிறுத்திக்கொண்டான்.

ஆகவே, அவன் நஞ்சையே உண்ணவில்லை; இந்தப் பிச்சைச் சோற்றை உண்ணுவானா?

பிச்சை வாங்கி உண்டால்தான் குற்றம்; வடு; பழி. பிச்சை வாங்கும் கோலத்தில் அவன் அன்பர்களுக்கு அநுக்கிரகம் செய்யப் போகிறான்.

ஆனாலும் புறங்கூறுகிறவர்களை எப்படி அடக்குவது? காரைக்காலம்மையார் யோசனையில் ஒரு கருத்துத் தோன்றுகிறது.

பகல் வேளையில் பிச்சையெடுப்பதை உண்டால் எல்லோரும் காண்பார்கள். அப்படி ஒருவரும் கண்டார் இல்லை. பகலில் வாங்கின பிச்சையை இரவிலே உண்ணுகிறானோ? இப்படி யாராவது எண்ணிப் புறம்பேசி, வடுவாகக் கூறினால் அவர்களுக்கு இரவிலும் அதை உண்ணுவதில்லை என்பதைக் காட்ட அவன் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறானோ? நிலாவைத் தலையிலே சூடியிருக்கிறானே, அது அதற்காகத்தானோ? 'இந்த நிலவொளியில் நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்' என்று அவன் சொல்லாமல் சொல்கிறானோ?

இந்தக் கேள்வியைக் காரைக்காலம்மையார் இறைவனையே கேட்கிறார்.

இறைவன் திருமேனி முழுவதும் வெள்ளைப்பொடியாகிய திருநீற்றைப் பூசியிருக்கிறான். அப்பழுக்கில்லாத சுத்த வெள்ளை நிறமாகத் தோற்றுகிறான். அத்தகையவனுக்கு இந்தப் பழியா? 'வெள்ளையான

நிறத்தை உடைய எம்பெருமானே! எனக்கு ஓர் உண்மையைச் சொல்ல வேண்டும்''. என்று தொடங்குகிருர்.

சுடுவெண் பொடிநிறத்தாய் சொல்லாய்.

'இவ்வாறு கபாலத்தில் பிச்சையாக உணவை ஏற்பது வடுவென்று பிறர் சொல்லவும் அது வடுவென்று நீ நினைக்கிருயா? அப்படியாளுல் இந்த நிலாவை ஏன் தலையில் சூடியிருக்கிருய்? மற்ற வர்கள் நீ இவ்வாறு செய்வதை இழிவாகக் கருதிப் புறங்கூறுவதைக் கேட்டுத்தானே அப்படிச் சூடி யிருக்கிருய்?'

வடு அன்று எனக்கருதி நீ மதித்தி ஆயின்

'நீ இது வடு அன்று என மதிக்கலாம். ஆனல் உலகம் கூறும் பழிச் சொல்லைக் கேட்டு அதை மாற்ற எண்ணினுயோ?'

படுவெண் புலால் தலையினுள் ஊண்புறம்பேசக் கேட்டோ
நிலாத் தலையில் சூடுவாய் நீ?

கையில் கபாலமும் தலையில் நிலாத்துண்டமும் உள்ளதை எண்ணி, இரண்டுக்கும் முடிச்சுப் போட்டு இப்படி ஒரு கற்பனையை அமைத்து அதையே கேள்வியாகக் கேட்கிருர் அம்மையார்.

வடுஅன்று எனக்கருதி நீமதித்தி ஆயின்
சுடுவெண் பொடிநிறத்தாய், சொல்லாய்;—படுவெண்
புலால்தலையி னுள்ஊண் புறம்பேசக் கேட்டோ
நிலாத்தலையில் சூடுவாய் நீ?

[சுட்ட வெண்மையான திருநீற்றின் நிறத்தை உடைய திருமேனிப் பெருமானே! உயிரின்றிப் பட்டுப்போன புலால்நாற்றம் கமழும் கபாலத்தினுள் பிச்சையுணவைப் பெறுவதைப் பழியன்று என எண்ணி நீ அதைச் சிறப்பாக எண்ணினையாயினும், மற்றவர்கள் புறத்தே பழிகூறுவதைக் கேட்டோ நிலாவையுடைய சந்திரனை நீ தலையில் சூடிக் கொண்டிருக்கிருய்? நீ அதன் காரணத்தைச் சொல்.

வடு-பழி. மதித்தி-உயர்வாக எண்ணினுய். ஆயின்-ஆயினும்; உம்மை தொக்கது. சுடுபொடி, வெண்பொடி எனக் கூட்டுக. திருநீற்ருல் இறைவ னுடைய திருமேனி வெள்ளையாகத் தோன்றுகிறது. நிறம்-மார்பு என்று கொண்டு வெண்ணீற்றையணி யும் மார்பையுடையவனே என்றும் பொருள் கொள்ள லாம். படு-உயிரின்றி விழுந்த; படுத்த என்றும் கொள்ளலாம்; வீழ்த்திய என்று பொருள். ஊண்-பெறும் உணவுப் பொருள். புறம்பேச-புறத்தே இழி வாகப் பேச.]

நீ அதை வடுவாக மதிக்காவிட்டாலும் மற்றவர் கூறும் பழியைக் கேட்டு அதை மாற்ற, அவர்கள் உண்மையறிந்துகொள்ளும்படி நிலாவைச் சூடி ளுயோ என்று கேட்கிருர்.

இது அற்புதத் திருவந்தாதியில் 56-ஆம் பாட்டு.

---

# மதமும் ஒழுக்கமும்



சுவாமி விவேகானந்தர்

## 1

இரசாயனமும் இயற்கை விஞ்ஞானமும் எப்படி இந்தப் பௌதிக உலகம் பற்றிய உண்மைகளைக் கையாள்கின்றனவோ, அதைப் போலவே மதம் தத்துவ உண்மைகளைக் கையாள்கிறது. ஒருவன் இரசாயனத்தைக் கற்க இயற்கை என்னும் புத்த கத்தைப் படிக்க வேண்டும். உன்னுடைய மனம், இதயம் ஆகியவைதாம் மதத்தைக் கற்பதற்கு நீ படிக்க வேண்டிய நூல்களாகும்.

ஞானி ? பெரும்பாலும் பௌதிக விஞ்ஞானம் பற்றித் தெரியாதவராக இருக்கிருர். ஏனென்ருல், அவர் தமக்குள் இருக்கும் புத்தகத்தைப் படிக்கிருர். அது பௌதிக விஞ்ஞானத்தைத் தெரிந்து கொள்வதற்குத் தவருன புத்தகமாகும்.

விஞ்ஞானியும்கூடப் பெரும்பாலும் மதத்தைப் பற்றித் தெரியாதவராக இருக்கிருர். ஏனென்ருல், அவரும்கூடத் தவருன புத்தகத்தையே படிக்கிருர்; அதாவது அவர் தமக்கு வெளியே உள்ள புத்த கத்தைப் படிக்கிருர்.

2

'நான் மதப்பற்று உள்ளவனாக இருக்க விரும்பினேன். இந்தத் தத்துவங்களை எல்லாம் அனுபவித்து அறிந்துகொள்ள விரும்பினேன் ஆனால் அவ்விதம் அவற்றை என்னால் அனுபவித்து அடைய முடியாமற் போய்விட்டது. ஆதலால் 'நான் எதையுமே நம்புவது கிடையாது' என்று சொல்லுகிற பல மனிதர்களை நீ இந்த உலகிலே பார்க்கலாம். படித்தவர்களில்கூட இப்படிப்பட்டவர்கள் இருப்பதை நீ காணலாம். 'என் வாழ்நாள் முழுவதும் மதப்பற்று உள்ளவனாக இருப்பதற்கு நான் முயற்சி செய்தேன்; ஆனால் அதிலே ஒன்றுமில்லை' என்று மக்களில் பலர் உன்னிடம் சொல்வார்கள். ஆனால் அதே சமயத்தில் நீ இந்த நிகழ்ச்சியையும் காண்பாய்: ஒருவர் இரசாயன சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்ற ஒரு பெரிய விஞ்ஞானியாக இருக்கிறார். அவர் உன்னிடம் வந்து இரசாயனத்தைப் பற்றிச் சொல்கிறார் என்று வைத்துக்கொள்வோம். "நான் இரசாயன விஞ்ஞானியாகத் திகழ வேண்டும் என்று வாழ்நாள் முழுவதும் முயற்சி செய்திருக்கிறேன். ஆனால் அப்படியிருந்தும் என் முயற்சியில் நான் ஒன்றும் வெற்றி பெற்றதாகத் தெரியவில்லை. எனவே இரசாயனத்தைப் பற்றிய எதையும் நான் நம்புவதில்லை" என்று நீ அவரிடம் சொல்வாயானால் அவர் உன்னைத் திருப்பி, "எப்போது நீ முயற்சி செய்தாய்?" என்று கேட்பார் நான் தூங்கச் செல்லும்போது "ஓ இரசாயனமே! நீ என்னிடம் வா' என்று மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டிருந்தேன் அது என்னிடம் வரவே இல்லை" என்று நீ சொல்வாய். இரசாயன விஞ்ஞானி உன்னைப் பார்த்துச் சிரித்துவிட்டு, "அப்பனே! இரசாயனத்தைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு அது வழியே அல்ல. நீ இரசாயனப் பரிசோதனைச் சாலைக்குச் சென்று, எல்லா வகையான அமிலங்களையும் காரங்களையும் எடுத்து வைத்துக்கொண்டு ஏன் அவ்வப்போது உன் கைகளைச் சுட்டுப் பொசுக்கிக் கொள்ளவில்லை? நீ அப்படிச் செய்திருந்தால் இரசாயனத்தைப் பற்றிய ஞானம் உனக்கு வந்திருக்கும்" என்று சொல்லுவார். மதம் சம்பந்தமாக அப்படிப் பட்ட பெரிய முயற்சியை நீ எடுத்துக்கொள்கிறாயா? ஒவ்வொரு துறைக்கும் அதைக் கற்பதற்கென்று ஒரு தனி வழிமுறை இருக்கிறது. அத்தகைய முறையில்தான் மதத்தையும் கற்க வேண்டும்.

3

இலௌகிக உலகம் பற்றிய சக்தியின் மையமாக ஐரோப்பா இருக்கிறது. அது தன்னுடைய இந்த நிலையை மாற்றிக்கொள்ள வேண்டும். ஆன்மிகத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கையாக அது தன்னை மாற்றி அமைத்துக் கொள்ளாவிட்டால், இன்னும் ஐம்பதே ஆண்டுகளில் நொறுங்கி அழிந்து விடும். ஐரோப்பாவை இத்தகைய அழிவிலிருந்து காப்பாற்றக் கூடியவை, உபநிஷத உண்மைகளே ஆகும். *[சுவாமிஜி 1897-இல் சொன்னது.]*

4

வேதங்கள், பைபிள், குரான், ஆகிய இவற்றுக்கும் அப்பால் மக்களை நாம் அழைத்துப் போக விரும்புகிறோம்; என்றாலும் இந்தச் செயலை வேதங்கள், பைபிள், குரான், ஆகியவற்றைச் சமரசப்படுத்தி வைப்பதன் மூலமாகத்தான் சாதிக்க முடியும். எல்லா மதங்களும், ஒரு பரம்பொருளான அந்த ஒரே ஒரு மதத்தின் புறத் தோற்றங்களே ஆகும். இந்த உண்மையை மனிதகுலத்திற்குப் போதிக்க வேண்டும். அப்படிச் செய்தால், ஒவ்வொருவனும் தனக்கு மிகவும் பொருத்தமாக உள்ள பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொள்வான்.

5

ஒழுக்கம் உள்ளவனாக இரு. தைரியம் உள்ளவனாக இரு. இதயபூர்வமான உறுதி பிறழாத ஒழுக்கத்தில் நிலைபெற்றிரு. மத சம்பந்தமான தத்துவ உண்மைகளைப் போட்டு உனது மூளையைக் குழப்பிக்கொள்ள வேண்டாம். கோழைதான் பாவம் செய்கிறான். தைரியசாலி ஒருபோதும் பாவம் செய்வதில்லை. மனதால் கூட அவன் பாவத்தை நினைப்பதில்லை.

6

சுயநலமே ஒழுக்கக் கேடு. சுயநலமின்மையே நல்லொழுக்கம். இதுதான் ஒழுக்கத்திற்கு நாம் கொடுக்கக்கூடிய ஒரே இலக்கணம் ஆகும்.

7

ஒரு மனிதன் மிகவும் அருமையான நடையில் சிறந்த கருத்துக்களைப் பற்றிப் பேசுபவனாக இருக்கலாம். ஆனால், அது மக்களைக் கவருவதாக இருக்காது. மற்றொருவன் பேச்சில் அழகிய மொழி, கருத்து என்னும் இவற்றுள் எதுவும் இல்லாமலிருக்கலாம். ஆனால், அவனுடைய சொற்கள் கேட்பவர்களின் உள்ளங்களைக் கவர்கின்றன. அவனுடைய ஒவ்வொரு செயலும் சக்தி வாய்ந்ததாக இருக்கிறது. இந்தச் சக்தி ஓஜஸ்ஸினால் வருவதாகும்...... கற்பொழுக்கம் உடைய ஆண்களும் பெண்களும் மட்டுமே ஓஜஸ்ஸை மேலே எழுப்பி மூளையில் சேமித்து வைக்க முடியும். ஆகையால்தான் பிரம்மசரியம் எப்போதும் மிகவும் உயர்ந்த ஒழுக்கமாகக் கருதப்பட்டு வருகிறது. ஒருவன் பிரம்மசரியத்திலிருந்து, தான் வழுவியதாக உணர்ந்தால், ஆன்மிகச் சக்தி அவனிடமிருந்து போய்விடுகிறது. அத்தகையவன் தன் மன உறுதியை இழந்து விடுகிறான். இதனால்தான், மகத்தான ஆன்மிக வலிமையைப் பெற்ற பெரியோர்களை உருவாக்கித் தந்த உலகிலுள்ள எல்லா மதச் சம்பிரதாயங்களும் பரிபூர்ணப் பிரம்மசரியத்தை எப்போதும் வலியுறுத்தி வந்திருக்கின்றன.

# ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை—600 004

## 1978 அக்டோபர் மாத நிகழ்ச்சிகள்

**ஸ்ரீ துர்கா பூஜை :**

7-10-78 சனி — ஸ்ரீ துர்கா சஷ்டி
மாலை 5-30 மணிக்கு ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம அர்ச்சனை

9-10-78 திங்கள் — மகா அஷ்டமி : சாந்தி பூஜை (இரவு 1-38 முதல் 2-25 வரை)
காலை 8 மணிக்கு விசேஷ பூஜை

11-10-78 புதன் — விஜயதசமி—மாலை வழிபாட்டிற்குப் பிறகு சாந்தி ஜலம் தெளித்தல்.

மேலே குறிப்பிட்ட துர்கா பூஜை நாட்களில் ஒவ்வொரு நாளும் மாலை வழிபாட்டிற்குப் பிறகு பஜனை நடைபெறும்.

15-10-78 ஞாயிறு — ஸ்ரீ லக்ஷ்மி பூஜை (மாலை வழிபாட்டிற்குப் பிறகு)
31-10-78 செவ்வாய் — தீபாவளி - ஸ்ரீ காளி பூஜை (மாலை வழிபாட்டிற்குப் பிறகு)

**சத்சங்கம் :** ஞாயிறுதோறும் மாலை 4 மணி முதல் 6-30 மணி வரை
ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம பாராயணம் (15-10-78 & 29-10-78)
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயணம் (8-10-78 & 22-10-78)

**சொற்பொழிவு (தமிழ்)**

1. அம்பிகையின் அருள்—திரு 'அண்ணு' சுப்ரமண்யம் (8-10-78)
2. ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம் - வி. ஆர். கல்யாணசுந்தர சாஸ்திரிகள் (15-10-78)
3. ஸ்ரீ பூதத்தாழ்வார் - டாக்டர் ஆர். பாலசுப்பிரமணியம் (22-10-78)
4. இராமாயணம் - டாக்டர் என். விழிநாதன் (29-10-78)

**சொற்பொழிவு (ஆங்கிலம்)**

1. பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் - சுவாமி தபஸ்யானந்தர் (8-10-78)
2. தேவி வழிபாட்டின் சிறப்பு-சுவாமி ஆத்மானந்தர் [1-10-78]
3. ஸ்ரீமத் பகவத்கீதை-சுவாமி கபீரானந்தர் [15-10-78 & 22-10-78 & 29-10-78]

வார நாட்களில் திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரையிலும் ஒவ்வொரு நாளும் மாலை 5-45க்கு வழக்கம் போல் சொற்பொழிவுகள் நடைபெறும்.

**சிறப்புச் சொற்பொழிவுகள் :** சனிக்கிழமைகளில் மாலை 5-45 மணிக்கு

1. ஸ்ரீமத் பாகவதம்—திரு பி. இராமகிருஷ்ணன் [28-10 78]
2. பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் - திரு த. இராதாகிருஷ்ணன் [14-10-78]
3. இராமாயணம் டாக்டர் என். விழிநாதன் [21-10-78]

**விசேஷ தினங்கள் :**

29-10-78 திங்கள் : ஸ்ரீமத் சுவாமி அகண்டானந்த ஜயந்தி

12-10-78 & 27-10-78 ஆகிய ஏகாதசி தினங்களில் மாலை வழிபாட்டிற்குப் பிறகு வழக்கம் போல் ஸ்ரீராமநாம சங்கீர்த்தனம் நடைபெறும்.

**மடத்தைச் சேர்ந்த சாதுக்களால் சென்னை நகரத்தில் நடத்தப்பெறும் வேறு சில நிகழ்ச்சிகள்**

7-10-78 சனி மாலை 7 மணிக்கு — ஸ்ரீமத் பகவத்கீதை
இடம் : அண்ணு நகர், பிளாட் 4547 [West border of tower]

14-10-78 சனி மாலை 6-30 மணிக்கு — ஸ்ரீமத் பகவத்கீதை
இடம் : இல. 18, 19வது லேன், சாஸ்திரி நகர்.

அனைவரையும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தொலைபேசி : 71231

தலைவர்,
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை-600 004

## கல்வி

பக்கங்கள் : 56+10 சைஸ் : கிரௌன் 1/8

விலை : ரூ. 2-50

சுவாமி விவேகானந்தர் கல்வியைக் குறித்து ஆங்காங்கே தெரிவித்துள்ள கருத்துக்களின் தொகுப்பு இந்நூல். ஆண்மை தரும் கல்வி, கல்வியின் தத்துவம், கல்வி கற்பிக்கும் முறை, ஆசிரியரும் மாணுக்கரும், கல்வியும் ஒழுக்கமும், மதக் கல்வி, பெண் கல்வி—என்னும் தலைப்புகளின் கீழ் வரிசைப்படுத்தப்பட்டுள்ள சீரிய கருத்துக்கள் அடங்கியது.

ஆங்கிலத்தில் இந்நூல் வெளியானபோது தேசபிதாவான மகாத்மா காந்திஜி குறிப்பிட்டார்: ''சுவாமி விவேகானந்தர் எழுதியிருக்கும் நூல்களுக்கு யாருடைய முகவுரையும் தேவையில்லை. அவை தடுக்க முடியாத உணர்ச்சியை நம் மனதில் உண்டாக்குகின்றன.''

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,
16, ராமகிருஷ்ண மடம் ரோடு,
சென்னை - 600 004

## பாரதப் பெண்மணிகள்

பக்கங்கள் : 29+viii சைஸ் : க்ரௌன் 1/8

விலை : ரூ. 2-50

பாரதப் பெண்மணிகளைப் பற்றியும், அவர்களுக்கு இலட்சியங்களான சீதை, சாவித்திரி, தமயந்தி என்பவர்களைப் பற்றியும், நமது மங்கையர்க்குரிய கல்வியைப் பற்றியும், அவர்களின் தற்கால நிலை, எதிர்கால நிலை இரண்டையும் பற்றியும், திருமணத்தைப் பற்றிய பொதுக் கருத்துக்களையும் சுவாமி விவேகானந்தர் பல இடங்களில் கூறியுள்ளதைத் தொகுத்து வரிசைப்படுத்தி வெளியிடப்பட்ட நூல்.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,
16, ராமகிருஷ்ண மடம் ரோடு,
சென்னை - 600 004

## தற்கால இந்தியா

பக்கங்கள் : 130+viii சைஸ் : டெமி 1/16

விலை : ரூ. 1-00

சுவாமி விவேகானந்தர் எழுதிய அருமையான ஒரு நூல். ''யான் ஓர் இந்தியன்; ஒவ்வோர் இந்தியனும் எனது சகோதரன் என்று பெருமையோடு பறையறைக'' என்ருர் சுவாமிஜி. பாரத நாட்டின் உயிர்நிலை, அது சென்றுள்ள நெறி, ஆங்கில ஆட்சியின் உட்கருத்து, வருங்கால இந்தியாவின் மேன்மை, நமது மக்கட்குரிய வாழ்க்கை இலட்சியம் இவை விளக்கமாக, உதாரணங்களோடு சிறந்த முறையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,
16, ராமகிருஷ்ண மடம் ரோடு,
சென்னை - 600 004

## சுவாமி விவேகானந்தரின் சம்பாஷணைகள்

பக்கங்கள் : 413+vii சைஸ் : டெமி 1/8

சாதா பைண்டு விலை : ரூ. 6-00
காலிகோ பைண்டு விலை : ரூ. 7-00

மேலை நாட்டுத் திக்விஜயத்திற்குப் பிறகு சுவாமி விவேகானந்தர் பேலூர் மடத்தில் தங்கியிருந்தார். அப்போது அன்பர்கள் சிலர் அவரை அணுகி நமது நாட்டின் சமயம், சமூகம், பொருளாதாரம், தேசியம், நாகரிகம், கல்வி, ஆத்மஞானம், இந்தியாவின் முன்னேற்றம்–ஆகிய பல பிரச்னைகளைப் பற்றிய ஐயப்பாடுகளை எழுப்பினர். அவற்றை எல்லாம் ஞானவொளி வீசும் தமது சொற்களால் தெளிவித்துத் தம்முடைய எண்ணங்களை வெளியிட்டார் சுவாமிஜி. அவர்களுக்கிடையே நடந்த பயனுள்ள சம்பாஷணைகளை எளிய நடையில் விளக்குகிறது இந்நூல்.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,
16, ராமகிருஷ்ண மடம் ரோடு,
சென்னை - 600 004

## ஆசிரியர் 'அண்ணு' உரை எழுதிய எங்கள் நூல்கள்

**நாகரத்திலும் தமிழிலும் மூலமும் பதவுரை, பொழிப்புரைகளும்**
**விளக்க உரையும் குறிப்புகளும் உள்ளன**

### I. உபநிஷதங்கள்

| | ரூ. | பை |
|---|---|---|
| ஈச-கேன-கட உபநிஷதங்கள் | 3 | 00 |
| காலிகோ | 5 | 00 |
| ப்ரச்ன-முண்டக-மாண்டுக்ய-ஐதரேய உபநிஷதங்கள் (பக்கம் 172) | (அச்சில்) | |
| தைத்திரிய உபநிஷத்து (பக்கம் 91) | | |
| காலிகோ | 2 | 50 |
| சாந்தோக்ய-ப்ருஹதாரண்யக உபநிஷத்துகளின் ஸாரம், ப்ரஹ்மஸூத்ரத்துடன் (மூன்றுவது பதிப்பு) பக்கம் 320 | 6 | 00 |
| காலிகோ | 9 | 00 |
| மஹாநாராயண உபநிஷத்து (தைத்திரிய நாராயணவல்லி) பக்கம் 146 | 5 | 00 |

### II. பகவத்கிதை

| | ரூ. | பை |
|---|---|---|
| ஸ்ரீமத் பகவத்கிதை | 8 | 00 |
| காலிகோ | 9 | 50 |
| ஸ்ரீமத் பகவத்கிதை (பாராயணம்) | 4 | 00 |
| ஸ்ரீமத் பகவத்கிதை மூலம் (தமிழ்) பாக்கட் சைஸ் | 2 | 00 |
| ஸ்ரீமத் பகவத்கிதை வெண்பா (முத்து ஐயர் இயற்றியது) பக்கம் 223 | 2 | 00 |

### III. வேதாந்த ப்ரகரணம்

| | ரூ. | பை |
|---|---|---|
| விவேக சூடாமணி (பக்கம் 392+XII) | 4 | 25 |
| காலிகோ | 5 | 50 |

### IV. வேதநூல்களும் பிரயோகங்களும்

| | ரூ. | பை |
|---|---|---|
| ஸ்ரீருத்ரம்-சமகம் (மஹாந்யாஸத்துடன்-பக்கம் 296) | 6 | 50 |
| காலிகோ | 10 | 00 |
| தைத்திரிய மந்த்ரகோசம் :— | | |
| தமிழில் ஸ்வரத்துடன் | 6 | 00 |
| நாகரத்தில் ஸ்வரத்துடன் முதல் பாகம் | 2 | 50 |
| ஷை இரண்டாம் பாகம் | 3 | 00 |
| தேவிபாகவதம் | (அச்சில்) | |
| ஸ்ரீதேவிமாஹாத்மியம் | 9 | 00 |
| ,, அட்டை பைண்டு | 12 | 00 |
| ஸ்ரீதேவிமாஹாத்மியம் பாராயணம் (தமிழில் மூலம்) | 2 | 00 |
| தேவி ஸ்தோத்திரம் | 2 | 50 |
| உபநயனம் | 3 | 00 |
| காலிகோ | 5 | 00 |
| குருகீதை | 3 | 25 |
| நாரத பக்தி சூத்திரங்கள் | 1 | 75 |
| ஜபவிதானம் | (அச்சில்) | |
| ஸந்தியாவந்தனம் (தமிழ்) | 2 | 00 |
| ,, காலிகோ | 4 | 00 |
| ,, ,, (நாகரம்-தமிழ்) | 4 | 00 |
| தேவிஸூக்தங்களும் உபநிஷதங்களும் | 1 | 50 |
| புருஷஸூக்தம் | 2 | 25 |
| பூஜாவிதானம் (தமிழ்) | 5 | 00 |
| ,, காலிகோ | 7 | 00 |
| ,, (நாகரம்) | 4 | 50 |
| காலிகோ | 6 | 00 |

### V. புராணங்கள்

| | ரூ. | பை |
|---|---|---|
| ஸ்ரீமத் பாகவத ஸாரம் : முதல் பாகம் (ஸ்கந்தம் 1-9) பக்கம் 560 | 10 | 00 |
| ஷை இரண்டாம் பாகம் (ஸ்கந்தம் 10-12) பக்கம் 560 | 12 | 50 |

### VI. ஸ்தோத்ரங்கள்

| | ரூ. | பை |
|---|---|---|
| ஸௌந்தர்யலஹரி பாஷ்யம் | 5 | 00 |
| ஸௌந்தர்யலஹரி (மூலம்) | | |
| ,, (நாகரம்-தமிழ்) | 1 | 50 |
| சிவானந்தலஹரி பாஷ்யம் | 4 | 00 |
| ,, (மூலம்) | 1 | 00 |
| சிவ ஸ்தோத்திரங்கள் | 1 | 50 |
| ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாஷ்யம் காலிகோ | 6 | 50 |
| ,, ,, பாராயணம் | 3 | 00 |
| ,, ,, மூலம் | 1 | 50 |
| ஸ்ரீ லலிதா த்ரிசதீ பாஷ்யம் | 2 | 50 |
| ஸ்ரீ லலிதா த்ரிசதீ ஸ்தோத்ரம் | 1 | 00 |
| ஸ்ரீவித்யா | 5 | 00 |
| ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம் | 7 | 00 |
| ,, ,, ஸ்தோத்ரம் (பாராயணத்திற்குரியது) | 2 | 00 |
| ஸ்ரீவிஷ்ணு ஸ்தோத்ரங்கள் | 1 | 00 |
| பஜகோவிந்தம் | 1 | 00 |
| ஸ்ரீக்ருஷ்ணகர்ணாம்ருதம் (பக்கம் 271) | 4 | 50 |
| அஷ்டோத்தர சத நாமாவளிகள் | 2 | 00 |
| ஆதித்ய ஹ்ருதயம் | 0 | 75 |
| சித்தி விநாயக பூஜை | 0 | 50 |
| நவராத்திரி பூஜை | 0 | 50 |

**ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் : : மயிலாப்பூர், சென்னை-600 004**

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் சந்தாதாரர்களுக்கு, சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் எல்லா வெளியீடுகளின்மீது 5% கழிவு தரப்படும். நூல்களை அனுப்புமாறு எழுதும் கடிதங்களில் சந்தாதாரர்கள் தங்களின் சந்தா எண்ணையும், கழிவு நீக்கி நூல்களை விற்பனைக்குப் பெற விரும்புவதையும் குறிப்பிடக் கோருகிறோம்.

ஆசிரியர் : சுவாமி தன்மயானந்தர்; துணை ஆசிரியர்; பிரம்மசாரி நிரஞ்ஜன சைதன்யா
பதிப்பாளர் : சுவாமி தன்மயானந்தர், ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை-600 004.
அச்சிடுபவர் : R. கிருஷ்ணஸ்வாமி, ஸ்ரீமதி பிரிண்டர்ஸ், 3/30 மவுண்ட்ரோடு, சென்னை-600 002

# காந்தியடிகளின் பொன்மொழிகள்



பொன்மொழிகள்

★ **ம**னிதனுக்குப் பயப்படுவதை நிறுத்த வேண்டும்; கடவுளின் சத்தியத்தை மட்டும் நாட வேண்டும். இவை இரண்டையும் செய்தால் நாம் அனை வரும் கடவுளின் தூதர்களாக மாற முடியும் என்று நான் நம்புகிறேன். ஆன்மிக வாழ்க்கையின் முதல் தேவை பயமின்மைதான்.

★ **க**டவுளிடம் ஓரளவு நம்பிக்கை இருந் தாலும் நாம் அவரைக் காண முடி யும். அவருடைய அன்பு நம்மைச் சுற்றி எல்லா இடத்திலும் பரவி இருப்பதையும் காண முடியும்.

★ **தெ**ய்வ சித்தத்தை ஒவ்வொரு மனி தனும் அறிந்துகொள்ள முடியாது. தெய்வ சித்தத்தை அறிவதற்கு வேண்டிய சக்தியைப் பெற தகுந்த பயிற்சி தேவை.

★ **சூ**தறியாத இளம் வாலிபர்கள் விலையற்ற பொக்கிஷங்கள். அந்த பொக்கிஷங்கள் க்ஷண நேரத்தில் தோன்றி மறையும் உணர்ச்சிகளுக் கும், சுகபோகம் என்று தவறாக அழைக்கப்படும் காரியங்களுக்கும் இரையாகித் தேய்ந்து போய்விடக் கூடாது.

**அசோகா பாக்குத்தூள் கம்பெனி பிரைவேட் லிமிடெட்**

தபால் பெட்டி நெ. 3702

11/234, டாக்டர் நஞ்ஜப்பா ரோடு

**கோயமுத்தூர்-641018**